
உறவும்
பிரிவும்
கே.எஸ்.ஆனந்தன்
கொழும்பு
ஸ்ருடியோ

Mrs. K. S. Anandan.

# உறவும் பிரிவும்

(சமூக நாவல்)

★

கே. எஸ். ஆனந்தன்

★

தமிழ்மன்ற வெளியீடு

இணுவில்.

வெளியீடு—1
முதற்பதிப்பு நவம்பர் 1964
உரிமை - மன்றப் பதிப்பகத்துக்கு

விலை ரூபா ஒன்று

அச்சுப்பதிவு:
நாமகள் அச்சகம், யாழ்ப்பாணம்.

# எமது நோக்கம்

தமிழனுக்கும், தமிழ் சமூகத்துக்கும் எம்மாலியன்றளவு கடமையைச் செய்ய வேண்டுமென்ற எமது மன்றத்தின் நோக்கத்தை மூன்றுண்டு காலமாக நாம் வெளியிட்ட **"உதய சூரியன்"** பத்திரிகை மூலம் உலகறியச் செய்தோம். அத்துடன் தமிழர்களுக்கும், தமிழ் இலக்கியத்துக்கும் தொண்டாற்றும் பொருட்டு பல நற்பணிகளையும், சமூகத்துக்கு ஒவ்வாத விடயங்களில் எதிர்ப்பையும் அவ்வப்போது தெரிவித்து வந்தோம். மன்றம் ஆரம்பித்த காலம் தொடக்கம் நாம் கொண்டிருந்த குறிக்கோளை **"உறவும் பிரிவும்"** என்ற நாவல் வெளியீட்டுடன் ஆரம்பித்துள்ளோம். இதேபோன்று பல எழுத்தாளர்களது நூல்களை வெளியிட மன்றம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இலைமறை காயாக வாழும் எத்தனையோ எழுத்தாளர்களது சிருஷ்டிகள் பத்திரிகைகளின் பற்றுக் குறையாலும், அச்சிடும் கூலி உயர்வடைந்திருப்பதாலும் அச்சேற்ற முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகவே எம்மாலியன்றளவு இப்பணியை தொடர்ந்து நிறைவேற்ற தமிழ் அன்பர்கள் நல்லாதரவு நல்கினுல் பல நூல்களை இதுபோன்று வெளியிட முடியுமென்ற நம்பிக்கை எம்மிடம் நிறைந்திருக்கின்றது.

இந்நாவலுக்கு அணிந்துரை நல்கிய இலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்கச் செயலாளர் திரு இ. மகாதேவா (தேவன் - யாழ்ப்பாணம்) அவர்களுக்கும், ஆதரவு நல்கிய இணுவில் இளந்தாரிகோவில் சனசமூக நிலையத்தார்க்கும், நல்லமுறையில் அச்சிட்டு உதவிய நாமகள் அச்சகத்தினருக்கும் எமது உளம் கனிந்த நன்றி உரித்தாகுக.

**பதிப்பகத்தார்.**

இலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்கச் செயலாளர்

# தேவன் — யாழ்ப்பாணம்

அவர்களின்

# அணிந்துரை.

நீண்ட நாவல்களுக்கு இனி வரவேற்பு இருக்காது. இது அவசரயுகம். குறு நாவல்களுககு இப்போது குருசந்திர யோகம்.

ஆகவே இளைஞர் கே எஸ். ஆனந்தன் இந்த "உறவும் பிரிவும்" என்ற நாவலை எழுதியதில் வியப்பில்லை.

அதிலும் இது காதல் குறுநவீனம். காதல் என்றால் ஏதோ செல்வந்தரின் விளையாட்டு, எழுத்துலகத்துக்குத் தீட்டு என்று கருதுபவர்கள் இருக்கிறார்கள். அதேவேளையில் ஆபாச, நிர்வாண வர்ணனைகளிலும் மூழ்கிக்கிடக்கிறார்கள். ஆனால் ஆனந்தன் பண்பு பிறழாமல் காதலைக் கையாண்டுள்ளார்.

நல்லதைக் கூறவேண்டும் என்ற தாகமும் தவிப்பும் இவரிடம் காணப்படுகிறது. அதனால்தான் அடிக்கடி ரவீந்திரரையும் திருவள்ளுவரையும் மேற்கோள் காட்டியுள்ளார்.

இதில் வரும் பாத்திரங்கள் உயிருள்ளவை. எழுத்தாளன் முற்போக்குவாதி மாணவன் சபேசன், ஓய்வு பெற்ற ஒரு ஆசிரியரின் நான்காவது பிள்ளை ஜோசபின் (ராஜி), கல்லூரிப் பெண்கள் பாமா, லூசி, பத்மா, மாக்கிரட் முதலியோர், பணத்திமிரும் பொறாமையுமுள்ள ரஞ்சிதம், பிறமதத்தவளை மருமகளாக ஏற்றுக்கொள்ள மறுக்

கும் தாய் சரஸ்வதி, காதலைத் தியாகம் செய்து கற்பைக் காக்கும் கோமதி – எல்லோரும் இக்கதையிலும் வாழ்விலும் நடமாடுபவர்கள் தான்.

சபேசனை ராஜி காதலிககிறாள். தானாகவே மனதை விட்டுச் சொல்கிறாள். நிறைவேறும் என நினைக்கும்வேளை யில் பணக்காரப் பெண்ணான ரஞ்சிதத்துக்கு சபேசன் தாலி கட்ட நேருகிறது. ரஞ்சிதம் ஒழுக்கங் கெட்டவள் என்று சில நாட்களுக்குள்ளேயே தெரிகிறது. தாய் சாக, ரஞ்சிதம் சாக, ராஜி கன்னியாஸ்திரி மடத்தில் சேர உறவுகளைப் பிரித்துக் கொள்கிறான் சபேசன். என்றோ ஒரு புத்த பிக்ஷு சொன்னதுபோல அவன் வாழ்வு அமைதியற்ற தாகி விடுகிறது. சோகக் கதைதான்.

கல்லூரிக் காட்சிகள் தத்ரூபமாயிருக்கின்றன. ''ஒளி வெள்ளமாய் வண்ணக்கோலமிட்டு உடனே கருகிவிடும் மத்தாப்பு ஒளியாக அமைவதிலேயே வாழ்க்கை,'' ''நீ இர வாய்ப் படர்வாய். நான் அதில் இனிய மணமாய்க் கலப் பேன்,'' ''என்னிரு கண்களும் நீங்கள் தானம்மா என்ற காலம் போய் இப்போது ஒரு கண்ணில் வந்துவிட்டாயா?'' ''ராஜியின் கண்களை நீர்த்திவலைகள் ஆட்கொள்ள அதிலே கரைந்து அவன் உருவம் மறைந்து கொண்டிருந்தது'' போன்ற வரிகள் ஆசிரியரின் சிந்தனை வளத்தைக் காட்டு கின்றன.

இதில் முளைவிடும் ஆனந்தன் எழுத்துலகில் ஒரு இடத்தை நிரந்தரமாகத் தனதாக்கிக் கொள்வார்.

# என்னுரை.

எழில் ஒளிவீசும் இளம் கன்னியாக தமிழணங்கைக்கண்டு இன்புற்ற நாள்முதல் எழுத்துலகில் தத்தித் தத்தி காலடி எடுத்துவைத்து நடக்கமுயன்றேன். ஓரளவு தேர்ச்சி பெற்றபோது நாவல் எழுதவேண்டும் என்ற ஆவல் என்னுள்ளத்தில் தோன்றியது. அதன் பலன் சில சமூகநாவல்களும், யாழ்ப்பாண வரலாற்றை அடிப்படையாகக் கொண்ட இரு வரலாற்று நாவல்களையும் உருவாக்கினேன். அவை அச்சுருப்பெற்று பத்திரிகையில் வெளிவரவேண்டுமென்ற ஆவல் என்னுள்ளத்திலிருந்தாலும் பலருக்குப் பந்தம் பிடிக்கவேண்டுமென்ற நிலையில் அந்த ஆவலை நிறுத்திவிட்டேன். பணத்துக்காகவோ, கௌரவத்திற்காகவோ பந்தம்பிடித்துவாழ நான் விரும்பவில்லை. அதற்காக நான் எழுதவும் இல்லை என்னுள்ளத்தினுள்ளே எழுந்த ஓர் ஆவல் என்னை எழுதத் தூண்டியது. எழுதினேன் அவ்வளவுதான்.

ஆனால் இந்நாவலின் மூலம் சமூகத்தில் ஓரளவாயினும் சீர்திருத்த நிலையை ஏற்படுத்த வேண்டுமென்ற என் நோக்கம் வெற்றி பெறுமாயின் அதுவே தமிழ் மொழிக்கும், சமூகத்திற்கும் நான்செய்த தொண்டாக மகிழ்ச்சியடைவேன்.

தமிழ் மன்றத்தின் நற்பணியாலும், திரு. தி. சி. சண்முகலிங்கம் அவர்களின் இடைவிடாமுயற்சியாலும் தேவன் அவர்களின் அளிந்துரையுடன் என் நாவல் நூலுருப்பெறுகின்றது. நூலுருவில் வெளியாகும் என் முதல் நாவல் இதுவாகையினால் சமன்செய்து சீர்தூக்கும் மனப்பாங்கு கொண்ட எழுத்தாளர்களும், அறிஞர்களும், வாசகநேயர்களும் இந் நாவலின்கண் காணும் குற்றங் குறைகளை மன்னித்து குணம் காணுமாறு வேண்டி தெய்வத்தாயான தமிழ்த்தாயின் திருப்பாதங்களில் சமர்ப்பித்து வணங்குகின்றேன்.

"தமிழகம்"
இணுவில். **கே. எஸ். ஆனந்தன்**

# உறவும் பிரிவும்

(கே. எஸ். ஆனந்தன்)

கீழைக் கடல் விளிம்பிலிருந்து கார்மேகத்திரள் விலகிப் பூவுலகை எட்டிப்பார்த்த நிலவு மங்கை, மேல வானம் நோக்கித் தன் உல்லாசப் பவனியை ஆரம்பித்தாள்.

ஜில் என்று வீசும் குளிர்ந்த காற்றையும், நிலவு மங்கையின் வரவினுல் குதூகலத்துடன் குதித்து விளையாடி பேரொலி எழுப்பும் கடலோசையையும் தவிர, இரவு பத்து மணிக்கு மேலாகிவிட்டது என்பதற்கறிகுறியாக எங்கும் பூரண அமைதி குடிகொண்டிருந்தது.

கிறீன்லன்ட் கல்லூரி என்ற பட்டதாரிகள் கல்லூரியின் பெண்கள் விடுதியின் மேல்மாடி அறையில் கடற்கரையைப் பார்த்தவாறு சிந்தனையிலாழ்ந்திருந்த செல்வி ஜெ. ராஜநாயகம் கலைப்பகுதி இறுதி வகுப்பில் பயின்று கொண்டிருந்தாள். அவள் அறையில் மூலைக்கு மூலை சிதறிக்கிடந்த அப்பியாசப் புத்தகங்கள் ஜன்னலுக் கூடாக வீசும் கடற்காற்றில் பட பட என இதழ் விரித்து ஒலி எழுப்பிக்கொண்டிருந்தன.

சிந்தனையிலாழ்ந்திருந்த ராஜிக்கு வாழ்க்கையே சூனியமாகத் தோன்றியது. தொலை தூரத்திற்கு அப்பால் நீல வானிலே நீந்திக் கொண்டிருக்கும் நிலவுக் கன்னியை எட்டிப்பிடித்து விளையாட விரும்பும் ஆழ்கடலின் அலைகள் ஈற்றிலே கரையில்மோதிச் சிதறுவதுபோல அவள் மன அலைகளும் சிதறிக் கொண்டிருப்பதனுல் தான் அவளுக்கு வாழ்க்கை சூன்யமாகத் தோன்றியது

படித்துப் பட்டம் பெற்றுவிட்டால் மட்டும் போதுமா? பெண்ணுகப் பிறந்து படித்து பட்டம்பெற்று உத்தியோ

கம் பார்க்க விரும்பும் இக்காலப் பெண்களைப்பற்றி சமூகம் கண்டபடி தூற்றுவதையும் படித்த பெண்களின் இல்லற வாழ்க்கை பெரும்பாலும் போராட்டமாகவும். அமைதியற்றதுமாக விளங்குவதையும் எண்ணிக் கொண்டாளா? இல்லை வகுப்பு மாணவர்களில் யாரையாவது காதலித்து அவன் சுந்தரரூபத்தில் மயங்கி தன் கன்னித்தன்மையை இழந்து விட்டதினால் ஏற்பட்ட கசப்பா? அப்படி அவள் சிந்தனை அலைகள் சிதறக் காரணமாக இருந்த துன்ப நிகழ்ச்சிதான் என்ன?

கையில் வைத்துக்கொண்டிருந்த அந்தக் கடிதத்தை மறுமுறையும் திருப்பிப் படித்துப் பார்த்தாள். அந்தக் கடிதத்திலிருந்த விடயமே அவள் மனத்தில் துன்ப அலைகள் புரளக் காரணமாக இருந்தன.

அன்புள்ள ராஜிக்கு அப்பா எழுதிக்கொள்வது; பல முறை எழுதிவிட்டேன் பதில் தராது மௌனம் சாதிக்கின்றாய். வலிய வந்துசேர்ந்த எத்தனையோ கல்யாணங்களை வேண்டாம் என்று உதறிவிட்டு படிக்கப்போவதாக முரண் செய்கின்றாய். அப்பாவின் எண்ணப்படி கல்யாணம் செய்ய மறுக்கும் நீ, உன் வாழ்க்கையில் வேறு யாரையாவது விரும்பியிருந்தாலும் அதை நிறைவேற்றிவைக்க நான் தயாராயிருக்கின்றேன். காலா காலத்திலே கல்யாணம் செயது குடியும், குடித்தனமுமாயிருப்பது தான் பெண்களுக்கு அழகு. அதைவிடுத்து பட்டம் பெற்று என்ன உத்தியோகமா பார்க்கப் போகின்றாய்? ஆண்களுக்கே உத்தியோகம் இல்லாமல் திண்டாடும் காலத்தில் பெண்ணான உனக்கு மட்டும் அரசாங்கம் உத்தியோகம் வைத்துக்கொண்டு காவலா இருக்கிறது. என்னவோ பெற்ற கடமைக்காக நான் இவ்வளவும் எழுதுகின்றேன் இனி உன் புத்திப்படி நடந்துகொள்

இங்ஙனம்
உன் அன்புள்ள அப்பா
ராஜநாயகம்.

கடிதத்தைப் படித்து முடித்ததும் நீண்டதோர் பெருமூச்சு அவள் உள்ளத்திலிருந்து வெளிவந்தது. அந்தப் பெருமூச்சில் அவள் உள்ளத்தை உறுத்திக் கொண்டிருந்த துன்பத்தின் சுமை வெளிப்பட்டது.

ராஜநாயகம் அவள் படிப்பிற்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டுத் திருமணம் முடித்துவைக்க பல முயற்சிகள் செய்து பார்த்தார். ஆனால் ராஜிக்கு திருமணம் என்ற அந்த உறவை மனதால் நினைக்கவே கசப்பாக இருந்தது.

அவளுக்கு மூத்த அக்காள் இருவரும் பட்டதாரிகள். அவர்கள் கல்யாணமாகிப் புருஷன் வீட்டிற்குப் போய் விட்டனர். அண்ணன் ஒருவன் அவனும் காலாகாலத்தில கல்யாணம் செய்துகொண்டு கொழும்பிலே தங்கிவிட்டான். வீட்டிலே கடைசிப் பிள்ளையான ராஜி சிறு வயதுமுதல் அம்மாவிற்குச் செல்லப்பிள்ளையாக வளர்ந்து விட்டாள். அந்தக் குழந்தையுள்ளம் தகப்பனைவிடத் தாயின்மீதுதான் அதிக வாஞ்சையுடையதாகவும் அமைந்துவிட்டது. தகப்பனுடைய ஓரவஞ்சகமான எண்ணத்தை அவளால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

ஓய்வு பெற்ற ஆசிரியரான ராஜநாயகம் மூத்த புத்திரிகளை அவர்கள் விருப்பத்திற்கு மாருகவே உயர்தரக் கல்விக்கு அனுப்பிப் படிக்கவைத்தார். தான் படிக்க விரும்பும்போது அதற்கு மாருக இல்லறத்தில் இணைத்துவிடத் துடிக்கும் தந்தையை நினைக்கும்போது அவள் உள்ளம் வேதனையடைந்தது.

தகப்பன் விரும்பாத படிப்பை தான் முடித்துவிட வேண்டும் என்ற ஆவலில் பீ. எ. மூன்ரும் வருடம்வரை படித்து முடித்துவிட்டாள். இறுதித தேர்வுக்கு இருந்து விட்டால் கட்டாயம் சித்தியடைந்து விடுவாள். அதற்கப்புறம் மிஸ். ராஜநாயகம் பீ. ஏ. ஆகிவிடுவாள். அவள் கனவு நனவாகிவிடும். அதற்கு இன்னும் சில மாதங்களே இருந்தன.

கடைசி நேரத்திலும்கூட தன் பட்டப்படிப்பை நிறுத்த எத்தனிக்கும் தந்தையை ஒரு மனிதனுகக்கூட எண்ண அவள் மனம் விரும்பவில்லை. ஆனுல் தாயின் நினைவு வந்ததும் அவள் துன்பமெல்லாம் பறந்தோடிவிடும். படிக்காவிட்டாலும் பரந்த உள்ளமும், உயர்ந்த அறிவும், அன்பு மனமும் கொண்ட தாயை நினைக்கும்போது அவள் அடிக்கடி கூறும் ரவீந்திரரின் பொன்மொழி ஞாபகத்திற்கு வரும். ''விவாகம் தனிப்பட்ட ஒருவரின் விருப்பத்தின்மேல் நடக்கும் செயலல்ல. அதனுடன் எவ்வளவோ சம்சாரச் சிக்கல்கள் கலந்திருக்கின்றன'' என்ற ரவீந்திரரின் தத்துவத்தைக் கூறி அவள் தலையைக் கோதிவிட்ட அன்னையை நினைக்கும்போது அவள் அன்பு முகம் முன்னே தோன்றி துன்பமடைந்த அவள் உள்ளத்திற்குச் சாந்தி அளிக்கும்.

"நீ இன்னும் தூங்கவில்லையா? எனக்கும் தூக்கம் வரவில்லை. அதுதான் ஏதாவது உன்னுடன் சேர்ந்து படிக்கலாம் என்று வந்தேன். நீ என்னடா என்ருல் எதையோ பறிகொடுத்தவள் போலிருக்கின்ருயே'' என்று ரஞ்சிதத்தின் குரல் கேட்டதும் சிந்தனை தடைப்பட்ட ராஜி வாசற்கதவருகில் தன்னையே உற்றுப்பார்த்துக் கொண்டு நிற்கும் ரஞ்சிதத்தைத் திரும்பிப் பார்த்தாள்.

''ஏன்டி ராஜி உடம்பிற்கு ஏதும்......?

''இல்லை ரஞ்சி, அப்பா எழுதிய கடிதத்தைப் படித்த போது என் நினைவு......''

"நீ ஒரு விசர். இதையே திரும்பத் திரும்பப் படித்துக் கொண்டு மூளையை அலட்டிக் கொண்டிருக்கிருய். பேசாமல் படி ராஜி'' என்ருள் ரஞ்சிதம்.

இவர்களுடைய சம்பாஷணையைக் கேட்டு அடுத்த அறையில் தூங்கிக்கொண்டிருந்த மிஸ். பாமா யேசுதாசன் கூட எழுந்து வந்துவிட்டாள்.

கல்லூரி மாணவிகள் சேர்ந்தால் கதைக்கு கேட்கவா வேண்டும்? கல்யாணக் கதை மட்டுமா கதைப்பார்கள்? ஒவ்வொரு பையன்களின் குணநலன்களையும் ஆராய்ந்து அவற்றிற்குப் புள்ளிகளும் போட்டு வைப்பார்களே!

"பாமா, இங்கே படிக்கும் பையன்களுடன் கதைப்பது கூட இல்லையடி ரஞ்சிதம். அவள் அத்தான் கட்டளை போட்டிருக்கின்றானும்" என்றாள் மிஸ் லூசி பெனுண்டோ.

"அத்தான் என்னடி அவள் வருங்காலக் கணவன்" என்று அந்த வாக்கியத்திற்கு இலக்கணம் கூறினாள் நிர்மலா.

மாணவிகள் விடுதியில் சிவராத்திரி நித்திரைவிழிப்போ என்று எண்ணுமளவிற்கு இருந்தது அன்றைய நிகழ்ச்சி. சில மாணவிகள் நோட் புத்தகங்களை கட்டியணைத்தபடி மந்திரம் செபிப்பவர்கள்போல பாடத்தை மனனம்செய்து கொண்டிருந்தனர். ஆனால் மிஸ் ஜொசவின், ராஜநாயகத்தின் அறையில் மட்டும் பெண்கள் மாநாடு தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தது.

ராஜியின் உண்மைப் பெயர் ஜொசவின் ராஜநாயகம். ஆனால் வீட்டில் அவள் பெற்றோர் "ராஜி" என ஆசையாக அழைத்துவந்த பெயர் பாடசாலையிலும் நிலைத்து விட்டது.

இரவு நேரம் பன்னிரண்டு மணிக்கு மேலாகி விட்டபோதும் நித்திராதேவியின் அரவணைப்பை வெறுத்தவன்போல எதையோ தீவிரமாக எழுதிக்கொண்டிருக்கின்றான் சபேசன்.

சாதாரணமான சிறிய ஓட்டு வீடு. ஒரு அறையில் "மினுக் மினுக்" என்று எரிந்துகொண்டிருக்கும் அரிகன் விளக்கின் உதவியுடன் ஒரு சிறு கதையை அமைத்துக் கொண்டிருந்தான்.

கல்லூரி மாணவிகளின் சுபாவங்களையே கருவூல மாகக்கொண்டு அமைத்த அச் சிறுகதையில் "பெண்களை விட்டு சற்று ஒதுங்கிப் பழகுவதே ஆண்களுக்கு நேர்மை" என்ற ரவீந்திரரின் வாக்கியத்தை எழுதிவிட்டு மேலே கதையைத் தொடராமல் அத்துடன் நிறுத்திவிட்டுப் படுக் கையில் சாய்கின்றான்.

கற்பனை வசமான அவன் சிந்தனையில் வரப்போகும் காலத்தைப்பற்றிய சம்பவங்களே அதிகம் இடம்பெற்றி ருந்தன. இல்லாத ஒன்றை வரப்போவதாகக் கற்பனை பண்ணி இன்பமடைவதில் இளம் உள்ளங்களுக்கு ஓர் அலாதியான பிரியம். அதேபோல வருங்கால வாழ்கை யின் அத்திவாரக் கல்லாக அச் சிறுகதை அமைந்து விட்டால்? அதுவே அவனை வாழ்க்கையின் மேற் படிக் குத் தூக்கிவிடும் ஏணியாகிவிடும் என எண்ணமிட்ட வாறு அவன் மனக்குதிரை விரைந்து சென்றுகொண்டி ருந்தது.

யாழ் எழுத்தாளர் மன்றம் நடாத்தும் சிறுகதைப் போட்டியில் முதற் பரிசிற்கு ஒதுக்கிய ஆயிரம் ரூபாய் தன் கைக்கு வந்துவிட்டது போன்ற ஒரு மனத்திருப்தி அவன் உள்ளத்தில் வேரூன்றிவிட்டது.

சிறு வயதிலேயே தந்தையை இழந்து தாயின் அர வணைப்பில் வளர்ந்த சபேசன் இயற்கையாகவே தாய்மீது மிகுந்த பற்றுள்ளவன். அதன் காரணமாகத் தாயைப் பிரிந்திருக்க மனமின்றி வீட்டிலிருந்தே தினமும் கல்லூ ரிக்குச் சென்றுவருவான். கலைப்பகுதி இறுதி வகுப்பில கல்வி பயிலும் சபேசன் தானுண்டு தன்படிப்புண்டு என்ற கொள்கையுடையவன். கல்லூரி விளையாட்டுகளிலோ, மற் றும் ஆடம்பர வைபவங்களிலோ கலந்துகொள்ளாது தனக் கென ஒரு தனிவழி அமைத்துக் கொண்டான் கல்லூரி வாழ்கையில். ஓய்வு நேரங்களில் சகமாணவர்களோடு சேர்ந்து கலகலப்பாக சிரித்துப் பழகியபோதும் பெண் களைப் பொறுத்த விடயங்களில் அவன் சேர்ந்துகொள்வ தில்லை.

சிறுவயது முதலே ரவீந்திரரின் நூல்களையும் மற்றும் அறிஞர்களுடைய நூல்களையும் கற்றதனுலாய பயனே அவன் இப்படியான கேளிக்கைகளில் பங்குபற்ருது மனதை அமைதியான ஒரு நிர்மலமான நிலைக்குக் கொண்டுவர முடிநதது. ''தோன்றிற் புகழொடு தோன்றுக'' என்ற பொய்யிற் புலவன் வாக்கிற் கிணங்க தன் வாழ்க்கை யில் ஏதாவது ஒரு சிறந்த துறையில் புகழுடன் வாழ வேண்டும் என்ற இலட்சியம் அவன் உள்ளத்தில் சிறு கச் சிறுக முளைத்து தளிர்விட்டுப் படர்ந்து பெரு விருட்சமாக வளர்ந்துவிட்டது.

அவன் இலட்சியக் கனவு நாளுக்கு நாள் அவன் எண்ணம் வளர்ந்ததுபோலவே நனவாகிககொண்டு வந் தது. ஓய்வுநேரங்களை மற்றவர்களோடு வீண் அரட்டை அடிப்பதில் கழிக்காமல் நற்சிந்தனையில் செலவழித்தான். அதன் பயன் சிறப்பான நாவல்கள், சிறுகதைகள் உரு வாகிக் கொண்டிருந்தன. அவன் முயற்சிக்குச் சில தின சரிப் பத்திரிகைகளும் உதவின.

"தியாகத்தேர்'' என்ற முதற் சிறுகதையுடன் எழுத் தாளர் மத்தியில் ''சிற்றரசு'' என்ற புனைபெயருடன் பவனிவர ஆரம்பித்த சபேசன் பிரபலமான எழுத்தாள ஞகிவிட்டபோதும் கல்லூரியில் அவன்தான் ''சிற்றரசு' என்று எவருக்குமே தெரிந்திருக்கவில்லை. இதன் காரண மாக சக மாணவர்கள் மத்தியில் அவன் ஒதுக்கப்பட்ட ஒரு ஏழை மாணவனுகவே காட்சியளித்தான். முக்கிய மாக பெண்கள் பகுதி அவனை எட்டத்தில்வைத்தே கவ னித்துக் கொண்டது.

அழகுமிகு வனிதைகளை, அற்புதமான சிருஷ்டியின் மூலம் உருவாக்கும் எழுத்தாளன் சபேசன் அரை நிர்வாண உடுப்பணியும் தமிழ்ப்பெண்களையும், குதிரைவால் கொண் டைகளையும் நாகரீகப் பித்துத் தலைக்கேறி மனிதனை மனிதனுக மதிக்கத் தெரியாத நவநாகரீக நாரீமணிகளை யும் எட்டிக்காய்போல் வெறுத்தான். இன்றைய நாகரீக

உலகில் பண்பான நல்ல குணமுள்ள ஒரு பெண்ணை எழுத்தாளனால்தான் படைக்க முடியுமேயன்றி உண்மையான நற்பண்புகொண்ட பெண்களைச் சமூகத்தில் காணக் கிடைப்பது அபூர்வம் என்று அடிக்கடி கூறிக்கொள்வான். மனத்தில் தோன்றும் கருத்துக்களை உலகுக்கு கூறத் தயங்குவதும் இல்லை. இப்படியான பலதரப்பட்ட கொள்கைகளையெல்லாம் ஒரு முகமாக்கி, பல சீர்திருத்தக் கருத்துக்களைப் புகுத்தி அன்றைய சிறுகதையை எழுத முனைந்து அரைவாசியுடன் நிறுத்திவிட்டு படுக்கையில் சாய்ந்தவன் சாய்ந்தபடியே விழிப்புடன் இருந்தான். சிந்தனை வசமாகி இன்பத்தேனில் மிதந்த அவனை நித்திரா தேவிகூட அணைக்கத் தயங்கினாள்.

"சபேசா! இன்னும் தூங்கலையாடா? நேரமும் நடுச் சாமத்தைத் தாண்டிவிட்டது. படுத்துத் தூங்கிவிட்டுக் காலையில் எழும்பிப் படியேன்." என்று அடுத்த அறையில் படுத்திருந்த அவன் தாயார் குரல் கொடுத்தாள்.

"படுத்திட்டேன் அம்மா, விளக்கை அணைக்கவில்லை" என்றவன் மேசைமீது எரிந்துகொண்டிருக்கும் அரிகேன் விளக்கை அணைத்துவிட்டு வந்து மறுபடியும் கட்டிலில். சாய்ந்து கொண்டான்.

வீட்டிற்குப் பின்புறத்தே மாமரத்தில் இருந்த சேவல்கள் சிறகடித்துக் கூவின. அவைகளின் குரல் கேட்டு அக்கம் பக்கத்தில் உறங்கிக் கொண்டிருந்த சேவல்களும் சேர்ந்து குரல் எழுப்பிக் கொண்டிருந்தன.

வானவீதியில் பவனிவரும் நிலவு மங்கையின் தண்ணொளியில் உள்ளம் பறிகொடுத்த அப்பட்சிகள் கூவிக் கொண்டே ஆதவன் வருகைக்குக் காத்திருந்தன போலும்

அப்போதும் அவனுககு உறக்கம் வந்தபாடாயில்லை. அரைவாசியுடன் நிறுத்திய சிறுகதையை எந்த வகையில் திருப்பிப் புதுமையாக அமைக்கலாம் என்பதிலேயே முழுக் கவனமும் ஈடுபட உறக்சமின்றிப் புரண்டு கொணடிருந்தவன் எப்ப நித்திரை வசமானான் என்பதே தெரியாது காலை ஏழரை மணிவரை உறங்கிக் கொண்டிருந்தான்.

ஜன்னலினூடாக வந்த சூரிய கிரணங்கள் முகத்திலே பிடித்து கணகளைக் கூசச் செய்தபின்பே துயில் நீங்கி எழுந்திருந்தான். அன்று கல்லூரிக்கும் லீவு போட்டுவிட்டு சிறுகதைப் போட்டிக்கு அனுப்பவேண்டிய கதையை எழுதி முடிப்பதிலேயே தன் கவனத்தைச் செலுத்தினான் சபேசன். "கிணிங் கிணிங்" என்ற பைசிக்கிள் மணியோசை வாசலில் கேட்டதும் அறையை விட்டெழுந்து வெளியேசென்ற சபேசன் திரும்பும்போது ஒருகட்டுக் கடிததத்துடன் உள்ளே நுழைந்தான். அத்தனை கடிதங்களும் ரசிகாகளிடமிருந்து "சிற்றரசு" விற்கு வந்த பாராட்டுக் கடிதங்கள்.

சமீபத்தில் தினசரியொன்றில் வெளியான சிறுகதைக்கு அவன் ரசிகப் பெருமக்களின் வாழ்த்துக்கள் ஒவ்வொரு கடிதத்திலும் நிறைந்திருந்தன.

கிறீன்லன்ட் கல்லூரியில் கல்விபயிலும் பட்டதாரி மாணவ, மாணவிகளின் பாராட்டுக் கடிதங்களும் சில அவற்றுள் இருந்தன. எல்லாக் கடிதங்களையும் படித்துக் கொண்டுவந்த சபேசன், கடைசியில் இருந்த கடிதத்தைக் கண்டதும் அவன் கண்களில் ஒரு புத்துணர்ச்சி. அந்தக் கடிதத்திற்காகவே எதிர்பார்ததிருந்தவன்போல அவன் உள்ளம் மகிழ்வு கொண்டது- உடனே அக் கடிதத்தைப பிரித்துப் படிக்கத்தொடங்கினான். அத்தனை மகிழ்ச்சியும் கடிதத்தைப் படிக்கப் படிக்க இருந்த இடம் தெரியாமல் மறைந்து அவன் முகத்தில் வேதனை குடிகொண்டது. ஏமாற்றத்தின் கோரப்பிடியில் சிக்கிய ஒரு அபலைப் பெண்ணின் கலங்கிய முகம் அந்தக் கடிதத்தில் காட்சியளித்தது. அவனையறியாமலே பெருமூச்சொன்று அவன் உள்ளத்திலிருந்து வெளிப்பட்டது. கையிலே பிடித்த கடிதம் காற்றிலே படபடத்துக் கொண்டிருந்தது. மனதிலுள்ள துன்பச் சுமையை எழுத்துருவில் வடித்திருந்தாள் கோமதி.

"கோமதி, உன் இன்பம் இவ்வளவுவிரைவில் மறைந்து போய்விடும் என்று நான் கனவில் கூட எண்ணியிருக்கவில்லை. பண்பின் சிகரம் அன்பின் திருவுருவும் என்று

நீ நம்பியிருந்தவன் உன்னை ஏமாற்றத்துக்காளாக்கிய போது எப்படி உன் பிஞ்சு உள்ளம் துடித்திருக்கும்? களங்கமற்ற தூய்மையான வாழ்வில் களங்கத்தை ஏற்படுத்தி விட்டானே கயவன். அவன் உனககு காதலனுக இருந்தாலும இன்று முதல் என் விரோதி. நீ பெண்களுக்குள் திலகமடி. உன்னை அவன் வெறுத்தபோதும் அவன் இன்ப வாழ்வையே கருத்தில் கொண்டு உன் வாழ்வையே தியாகம் செய்யும் உத்தமியடி நீ'' என எண்ணமிட்டவாறு அறையில் குறுக்கும் நெடுக்குமாக உலாவிக்கொண்டிருந்தான் சபேசன்.

ஒருதாய் வயிற்றில் பிறந்திருக்காவிட்டாலும் கூடப் பிறந்த அண்ணன் தங்கை போன்று நெருங்கிய உறவு கொண்டிருந்தனர் கோமதியும் சபேசனும். தங்கையின் இன்பத்தைக் கேட்டு அறிந்து மகிழ்ச்சியடைந்த சபேசன் அவளுக்கு நேர்ந்த துயர்கேட்டதும் துடிதுடிததுவிட்டான்.

அவளுக்கு மகிழ்வூட்டும் வழிவகைகளில் அவன் சிந்தனை சென்றது. துயரப்பட்ட அவள் உள்ளத்திற்கு தேறுதல் அளிக்க வேண்டியது தன் கடமை என்பதை உணர்ந்த சபேசன் அவளுக்கு கடிதம் எழுத முயன்ருன்.

எழுதி அரை குறையாகவிட்ட சிறுகதைகூட அப்போது அவனுக்கு ஒரு பொருட்டாகத் தோன்றவில்லை. அவள் துன்பத்தை துடைப்பதே அவன் நோக்கம். அவள் கண் கலங்கினுல் அவன் மனம் கலங்கும். அத்தனை அன்பு அவர்களைப் பிணைத்து வைத்திருந்தது.

> ''புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதன்
> நட்பாம் கிழமை தரும்''

என்ற வள்ளுவன் வாக்கைப் போன்று அவர்களிடையே ஏற்பட்ட நட்பு சகோதர அடிப்படையில் வளர்ந்து முழுமை பெற்றபோதும் ஒருவரையொருவர் சந்தித்ததோ கதைத்ததோ கிடையாது. கடிதந்தான் அவர்களைப் பிணைக்கும் கருவியாக இடையே அமைந்திருந்தது.

சமூகத்தின் மத்தியில் அண்ணன் தங்கையாக நடித்து தனிமையில் சந்திக்கும்போது காதலர்களாக மாறும் இளவல்களிடையே கோமதி சபேசன் தொடர்பு புதுமையானது மட்டுமன்று மற்றவர்களுக்கு விந்தையளிப்பதாகவுமிருந்தது. பொறாமைகொண்ட சிலர் தபால் சேவகனின் உதவியுடன் கடத்திய சில கடிதங்களைத் துணைகொண்டு அவர்களிடையே மலர்ந்துள்ள சகோதர பாசத்தை பலவிதமாகத் திரித்துப் பரப்பினர்.

ஆனால் சமூகம் பலதையும் கூறும், அதன் கூற்றை அதிகமா நாம் ஏற்றுக்கொண்டால் உண்மையை உலகத்திற்கு உணர்த்த முடியாது போய்விடும். ஆகவே சமூகம் எதைச் சொன்னபோதும் மனச்சாட்சிக்கு விரோதமில்லாத வகையில் வாழ்ந்துகொண்டே எமது தூய்மையை உலகறியச் செய்ய வேண்டுமென்ற பரந்த கொள்கையுடையவனான சபேசன் அவ்வப்போது தன் அறிவுரைகளையும் கோமதிக்கு கூறத் தவறவில்லை.

தாய்க்கு ஒரே பிள்ளை. அக்காள், தங்கை அண்ணன் தம்பி எவருடனும் கூடிப்பிறக்காததால் பிறரைத் தன் உடன்பிறந்த சகோதரர்களாக மதித்துப் பழகும் சபேசனுடைய உறவைப் பலரும் விரும்பக் காரணமாக இருந்தது அவனுடைய இனிய சுபாவமே. இந்த ரீதியிலும் எழுத்தாளன் என்ற ரீதியிலும் பலருடன் தொடர்பு கொண்டிருந்தான் சபேசன். அப்படிப்பட்ட தொடர்பினால் ஏற்பட்ட உறவே கோமதிக்கும் சபேசனுக்கும்.

“கோமதி வாசம்” என்ற ஒற்றை மாடிக் கட்டிடம் சுன்னாகம் புகையிரத வீதியில் பலரது கவனத்தையும் கவரக்கூடியதாக விளங்கியது. வீட்டு முகப்பிலுள்ள மொட்டை மாடியில் படர்ந்து அழகுடன் காட்சியளிக்கும் பலவிதமான பூங்கொடிகளும் பார்ப்பவர்கள் மனதைத் தன்பாலிழுக்கும் சக்திபெற்றிருந்தனவென்றால் அதற்குக் காரணம் கோமதியின் முயற்சியேதான்.

எஸ். எஸ். சி. பரீட்சையுடன் பள்ளிப்படிப்பை முடித்துக்கொண்ட கோமதி வீட்டிலே தன் ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தி வீட்டை அலங்கரிப்பதிலேயே அதிக நேரத்தைச் செலவிட்டாள்.

கோமதியின் அக்கா இருவர். அண்ணன் ஒருவன் யாபேரும் கல்யாணம் செய்துகொண்டு தனிக் குடித்தனம் போய்விட்டனர். கோமதி வாசத்தில் அவளும், தங்கையும் பெற்றோருமே தங்கியிருந்தனர்.

ஏதோ தூரத்து உறவினன் என்று கூறிக்கொண்டு கோமதி வாசம் வந்துசென்ற ஒருவன் அவள் அழகில் தன்னைப் பறிகொடுத்தான். பருவத்தின் எழிற் சோலையில் பூத்துக்குலுங்கும் மலரான கோமதியும் அவனை நம்பினாள்

சாதாரணமாக வந்தவன் தினசரி வரத்தொடங்கி இடைக்கிடையே கோமதி வாசத்தில் தங்கியும் சென்றான் நாளடைவில் அவர்கள் காதலும் வளர்ந்து படர்ந்து பெரு விருட்சமாகிவிட்டது. காதல் என்ற பொருளுக்குப் பலரும் பலதரப்பட்ட கருத்துக்களைத் தெரிவித்தபோதும் தற்கால இளைஞர்கள் மத்தியில் உலவும் தத்துவம் காதல் என்றால் கலவி என்பதாகும். காதற்பசியால் துடிக்கும் இளைஞனும் யுவதியும் ஒருநாள் இருநாள் பழக்கத்தில் கணவன் மனைவியாகப் பழகிக்கொள்ளும் தன்மையே பெரும்பாலும் இன்று காணக்கூடியதொன்றாகவுள்ளது. இதே ரீதியில்தான் அந்த இளைஞனும் கோமதியிடம் பழக முற்பட்டான். ஆனால் உண்மையான காதல் உடற்பசியில் தங்கியதல்ல, உண்மையான உள்ளன்பில்தான் தங்கியுள்ளது என்ற தத்துவத்தைப் போதித்தாள் கோமதி.

சங்க காலம் முதற்கொண்டே தமிழ்ப் பெண்கள் காதல் வாழ்வில் ஈடுபட்டு களவொழுக்கத்தில் இன்பம் கண்டனர் என்ற விடயத்தை அவள் அறிந்திருந்த போதும் அறநெறி வழுவாத வாழ்வு வாழ்ந்த அக்கால மக்கள் வாழ்க்கையுடன் நாகரீக மோகத்தின் போலி மயக்கத்தில் ஈடுபட்டுள்ள இக்கலா காதல் வாழ்வை ஒப்பிட்டுப் பார்க்க அவள் மனம் விரும்பவில்லை.

பழுத்த கனி பருவ விருந்தளிக்க முன்னிருக்கும்போது பசியுடையவனுல் பார்த்துக்கொண்டு பொறுமையுடனிருக்க முடியவில்லே. பல்லேக்காட்டினுன், பயப்படுத்தினுன், அதிகாரம் செய்தான். ஆனுல் "கழுத்தில் தாலி ஏறுமுன் என் கன்னித் தன்மையை இழக்க நான் சம்மதிக்கமாட்டேன்" என்று திட்டமாகக் கூறிவிட்ட கோமதியைக் கொலே செய்யத் துடித்தான் அவன். திட்டம் நிறைவேருதளவில் கருத்து வேற்றுமை வளர்ந்து அவர்கள் உறவில் பிரிவு ஏற்பட்டு வளர்ந்தது. முடிவு? அவள் ஏமாற்றத்தின் எல்லேக்கோட்டில் விடப்பட்டாள்.

அத்தனே விபரமும் சபேசன் அறிந்திருந்தான். அவள் பிடிவாதக்காரி, தன் தூய்மையான வாழ்விற்கு ஏற்பட்ட ஏமாற்றம் இனிமேல் நல்லதோர் வாழ்விற்கு வழிகோல மாட்டாது, காலம் முழுவதும் கன்னியாகவேயிருப்பது என்ற பிடிவாதத்துடனிருந்தாள்.

சமூகத்தில் குறைவான அந்தஸ்துடைய ஒருவனுக்குப் பணம் அல்லது புகழ் வந்து சேர்ந்துவிட்டால் அவனே இகழ்ந்தோர் எல்லோரும் புகழ்பாடத் தொடங்கி விடுவர். அவனுடன் நட்புக்கொள்வதற்கும் முயலுவர். ஆனுல் சிலர் அப்படி அந்தஸ்துடையவனேப் பொருமையுடன் நோக்குவதுடன் அவன் பழைய வாழ்க்கையை எடுத்துக்காட்டி இகழ்ச்சி பாடுவர். இப்படிப் பல குணங்களும் நிறைந்த மனிதர்களேக் கொண்டதே சமூகம். அதேபோல கிறீன்லன்ட் கல்லூரி மாணவிகள் விடுதியிலும் பல குணங்களேக் கொண்ட சமூகத்திலிருந்தும் வந்த மாணவிகள் அங்கம் வகித்தனர்,

அத்தனே பேரும் இதுவரை காலமும் எவனேத் தாழ்வு மனப்பான்மையுடன் ஒதுக்கி வைத்தனரோ அவன் தங்கள் யாவேரிலும் உயர்ந்த புகழுடையவனுக விளங்குகின்ருன் என்பதை அறிந்தபோது பொருமைகொண்டனர் பலர்! வியந்தனர் சிலர்! மண்ணுக்குள் மணிபோல மறைந்து

கிடந்த அவன் பெருமையை இதுவரைகாலமும் அறியாது போனேமே என்று வருந்தினர் சிலர்! அவன் நட்பை விரும்பினர் சிலர்! இத்தனைக்கும் காரணம்?

அன்று காலையில் வெளியான தினசரிகளிலெல்லாம் சபேசனுடைய புகைப்படத்துடன் யாழ் எழுத்தாளர் மன்றம் நடத்திய சிறுகதைப் போட்டியில் முதல் பரிசுபெற்ற விபரமும் அத்துடன் "சிற்றரசு" என்ற புனைபெயரில் இதுவரை பலரும் போற்றும் எழுத்தாளனாக மறைந்து வாழ்ந்த அவனுடைய வாழ்க்கை வர்ணனையும் வெளியாகி இருந்தமையேதான்.

சமூகத்தில் மட்டுமன்றிக் கற்றறிந்தோர் மத்தியிலும் சபேசனுடைய புகழ் ஓங்கி இருந்தது. "சிற்றரசு" என்ற புனைபெயருக்கு உரியவன் சபேசன் என்பதை அறிந்த போது கிறீன்லன்ட் பட்டதாரி கல்லூரி மாணவிகள் பலர் வாயைப் பிளந்தனர். "எத்தனை விதமான பாராட்டுக் கடிதங்கள் அனுப்பினேம், அத்தனையும் சபேசனுக்குத் தானா?" என்று தம்செயலை நினைத்து வெட்கமுற்றனர்சிலர்.

"ரஞ்சிதம்! பத்திரிகையைப் பார்த்தியாடி சபேசனைத் தூங்குமூஞ்சி என்று நினைத்தோம். அடேயப்பா! பலரும் போற்றும் எழுத்தாளனடி.. நான் முன்பே சந்தேகப்பட்டேன், அவன் அடிக்கடி பத்திரிகைகளைக் கட்டிக்கொண்டழுவதில் காரணம்ஏதும் இருக்குமென்று" என்ருள் பத்மா.

"யாருடைய கதையைத் திருடினனே? வகுப்பிலே ஒன்றும் தெரியாது கதை என்னடி கதை?" பலதும் அறிந்தவள்போல் பேசினுள் ரஞ்சிதம்.

"ரஞ்சிதம் ஏன்டி சபேசனைத் திருடன் என்கிருய்? யாருக்கென்னடி செய்தார்? தானும் தன்பாடும் என்று இருக்கும் ஓர் அப்பாவி" என சபேசனுக்காக பரிந்து பேசினுள் ராஜி.

"ஓ......கே இவள் சபேசனிலை ஒரு கண்வைததிருக்கிருள். ராஜி! அவன் பொல்லாத டுப்மாஸ்டர். அவனுக்கு ஊரிலேயே கெட்டபெயர். மனதைப் பறிகொடுத்திடாதேடி கண்ணு" என்ருள் ரஞ்சிதம் கேலியாக.

"உனக்கு ஏனடி இத்தனை பொறுமை? சபேசனை நான் விரும்பவுமில்லை கண் வைககவுமில்லை" என்று சுடச் சுடப் பதிலளித்தாள் ராஜி.

"எனக்கொன்றும் பொறுமையில்லை. அவன் எழுதிப் பரிசுபெற்ற கதை முழுதும் வாசித்தாயா? பெண்களை அதுவும் கல்லூரிப் பெண்களை எவ்வளவு கேவலப்படுத்தி எழுதியிருக்கின்றான். இவனு எழுத்தாளன்? இவனுக்கு எமது ஹாஸ்டலிலும் ஆதரவா?" என்று பேசிக்கொண்டிருந்தாள் ரஞ்சிதம். அவள் எடுத்துக்காட்டிய ஒவ்வொரு ஆதாரமும் சபேசனுடைய குற்றங்களை உறுதிப்படுத்தும் வகையில் அமைந்திருந்தன.

தான் ஒருத்திமட்டும் அவனுக்காகப் பரிந்து பேசி பயன் ஏதும் இல்லை என்பதை அறிந்துகொண்டு பேசாமலே எழுந்து போய்விட்டாள் ராஜி.

திங்கள் காலை வழமைபோல பட்டதாரி மாணவர்கள் மாணவிகள் எல்லோரும் கல்லூரி முன் சதுக்கத்தைக் கடந்து நூல் நிலையத்திலும், வெளி மாணவர் தங்கும் பொது அறையிலும் தங்கியிருந்தனர். காலை ஒன்பது மணிக்கு விரிவுரை வகுப்புக்கள் ஆரம்பமாகிவிடும். அது வரை நூல்நிலையத்திலும், பொது அறையிலும்தான் பலரும் தங்குவது வழக்கம்.

சில மாணவிகள் முக்கியமாக ஹாஸ்டலிலிருந்து வருவோர் கல்லூரிக்கு முன் உள்ள சதுககத்தில் மரங்களுக்குக் கீழே கூட்டம் கூட்டமாக நின்று அரட்டையடிப்பார்கள். அன்று காலை கூடி நின்று கதைத்துக்கொண்டு நின்றவர்களுடைய பேச்சுக்களில் முக்கியத்துவம் பெற்றது சபேசனுடைய பெயராகும்.

வழமையாக ஒன்பது மணிக்கு கல்லூரி வாசலை வந்தடையும் இ. போ. ச. பஸ்வண்டி அன்று 8-50 மணிக்கே வந்துவிட்டது. தினசரி வந்துபோகும் மாணவர்கள் பலர் பஸ் வண்டியிலிருந்து இறங்கி கல்லூரிச் சதுக்கத்திற்

கூடாக அமைக்கப்பட்டிருந்த ரோட்டில் நடந்து கொண்டிருந்தனர். என்றும் போலவே அன்றும் சாதாரணமாகத் தனிமையில் எல்லோருக்கும் பின்னே வந்துகொண்டிருந்தான் சபேசன்.

சபேசனைத் தலைநிமிர்ந்து பார்த்தறியாத மாணவிகள் எல்லோரும் கல்லூரி வாசலிலேயே சபேசனைக் கண்டதும் சுறுசுறுப்படைந்தனர். "வரட்டுக்கும், வரட்டுக்கும்" என்று கறுவிக் கொண்டாள் ரஞ்சிதம்.

கல்லூரி நூல்நிலையத்தை நோக்கி நடந்துகொண்டிருந்த சபேசனை 'குட்மாணிங் மிஸ்டர் சபேசன்" என்ற இனிமையான குரல் வரவேற்றது. திடுக்குற்றவனாகத் தலைநிமிர்ந்து பார்த்த சபேசனுடைய கண்கள் ஆச்சரியத்தால் விரிந்தன.

"குட்மோனிங் மிஸ்" என்றான்.

"கொங்கிருசுலேசன் சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு பெற்றதற்காக" என்று அவள் கூறிமுடிப்பதற்குள் பெண்கள் குழாமே படையெடுத்து வந்ததுபோல பல பெண்கள் வந்து அவனைச் சூழ்ந்துகொண்டனர்.

"எழுத்தாளர் அவர்களே! எங்கள் வாழ்த்துக்கள்" என்றாள் ரஞ்சிதம்.

"நன்றி" என்று ஏதுமறியாத வஞ்சனையற்ற அவன் உள்ளம் நன்றி தெரிவித்தது.

"கொல்" என்ற சிரிப்பொலி எழுந்து மடிந்ததைத் தொடர்ந்து "ஏன் ஐயா எழுத்தாளரே உமக்குக் கதை எழுத வேறு ஒன்றும் கிடைக்கவில்லையோ? எழுத்தாளனும் எழுத்தாளன். பெண்களைக் குறைகூறி எழுதும் முட்டாள்களின் கதைகளுக்கு பரிசும் பாராட்டும்" என்று பொரிந்து தள்ளினாள் லூசி.

"உலகத்தில் முட்டாள்களில் பலவகையுண்டு. அதில் ஆண்முட்டாள்களே எல்லோரையும் விட அதிகம் என்று ரவீந்திரர் கூறியது உண்மைதான்டி" என்றாள் மிஸ் ஜேம்ஸ்.

கேலிச்சிரிப்பும், பேசத்தகாத வார்த்தைகளும் அவன் உள்ளத்தைக் குடைந்தெடுத்தன. உடம்பெல்லாம் வியர்த்து விறு விறுத்துச் சேட்கூட நனைந்துவிட்டது,

“பேசி முடித்துவிட்டீர்களா? உங்களிடம் பெண்களுக் குரிய ஏதாவது ஒரு குணம் இருக்கின்றதா? இதைவிட வேறு என்னதான் கல்லூரி மாணவிகளிடம் காணக்கூடியதாக இருக்கு? பெயருக்கும் உருவத்திற்கும் பெண்கள் என்று கூறிக்கொள்கிறீர்களேயன்றி பெண் தன்மைக்கும் உங்களுக்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறதென்று தெரியுமா?” துணிவை வரவழைத்துக் கொண்டு கேட்டு விட்டான்.

“மிஸ்டர் நாங்கள் புதுமைப் பெண்கள், பாரதியாரின் கவிதை படியாத எழுத்தாளரா நீங்கள்? இது தெரியாத உமக்குத்தான் எழுத்தாளன் பட்டமா?” வெடுக்கெனக் கேட்டாள் ரஞ்சிதம்.

“சீச்சீ பெண்களாம் பெண்கள். பாரதியார் கூறிய புதுமைப் பெண்களுக்கும் உங்களுக்கும் ஏணிவைத்தாலும் எட்டாது சோதரிகளே! உங்களுடன் பேசுவதற்கே எனக்குப் பிடிக்கவில்லை.” என்று கூறிப் புறப்பட்டவன் தனிமையில் முன்னுக்கு நின்ற ராஜியைக் கண்டதும நின்று அவளைத் திரும்பிப்பார்த்தான். “மிஸ் ராஜநாயகம், நீங்கள்தான் இந்தக் கூட்டத்தின் தலைவியோ? முன்னேற்பாட்டுடன்தான் திட்டமிட்டு நடத்தியுள்ளீர்கள். இல்லையா? உங்களுக்கு நான் என்ன கெடுதல் செய்தேன்? ஏன் இப்படி என்னைக் கேவலப்படுத்திக் கதைத்து அதில் நீங்கள் இன்பம் காணுகின்றீர்கள்? நான் ஏழை என்பதாலா? உங்களுடன் அரட்டை அடித்துப் பொழுதுபோக்கும் மற்றவர்களைப் போலல்லாது ஒதுங்கிப் பதுங்குகிறேனென்று? குட்டக் குட்டக் குனிபவனும் முட்டாள் குட்டுபவனும் முட்டாள் என்பதை அறிவீர்களல்லவா? உங்கள் கேலிப் பேச்சுக்களைப் பொறுமையுடன் சகித்துவந்தேன். ஆனால் இன்று நேரடியாகவே ஆரம்பித்துவிட்டீர்கள். எனக்கும் உணர்ச்சிகள் உண்டு. மற்றவர்களைப் போல் அரட்டை அடிக்கத் தெரியும். ஆனால் நீங்கள் பெண்கள் என்பதால் இதுவரை ஒதுங்கிப் பழகினேன் பெண்மை என்ற தன்மைக்கும் உங்களுக்கும் வெகுதூரம் என்பதை நிரூபித்து விட்டீர்கள், பரவாயில்லை, இதேபோல் உங்கள் சகோதரன்

ஒருவனை மற்றவர்கள் கேலிசெய்தால் உங்கள் உள்ளம் எப்படி வேதனையடையும் என்பதை எண்ணிப் பார்த்தீர்களானால் இப்படி நடந்துகொள்ள மாட்டீர்கள்" என்றுகூறிவிட்டு நடக்க முற்பட்டான்.

"மிஸ்டர் ஒரு வார்த்தை........" என்ற ராஜியின் வேண்டுகோள் அவன் காதில் விழவில்லை.

குதித்துக் கும்மாளமடித்த பெண்கள் யாபேரும் வாயடைத்துப் பிரமித்துப் போயினர். ஊமைபோலிருந்தவனா இவ்வளவு பேசினான்? என்று திகைத்தனர் சிலர். அவன் உருக்கமான பேச்சைக்கேட்டு பரிதாபப் பட்டனர் சிலர். "பாவம் சபேசன்" என்று பரிந்து பேசினர் சிலர். ஆனால் அவனுக்குப் புகழ் ஏற்பட்டுவிட்டதே என்ற பொறாமையினால் சிலர் மனதில் ஏற்பட்ட அந்த வெறுப்புணர்ச்சி அத்தனைக்கும் மேம்பட்டு நின்று அவனைத் தாழ்வு மனப்பான்மையுடனே நோக்கின. ஆனால் ராஜியின் உள்ளம் அவனுக்காக அழுதது. அவனைத் தன் தோழிகள் கேலி செய்ததை நினைக்கும்போது "இவர்களும் பெண்களா?" என்றெண்ணி வெறுப்புற்றது. கல்லூரிமணி ஒலித்தது அவற்றிற்கெல்லாம் முற்றுப்புள்ளி வைத்தது.

மாலையும் இரவும் சந்திக்கும் வேளை மாலைச்சூரியனின் மஞ்சள் வெயில் யாழ்ப்பாணம் கிறீன்லன்ட் கல்லூரி கட்டடங்களில் பிடித்துத் தங்க முலாம் பூசியது போன்று மினுங்கிக் கொண்டிருந்தது. கல்லூரிக் காம்பவுண்டுக்குள் அலங்காரப்பந்தல் அழகாக விளங்கியது. "பாரதி விழா" என்று மணிகள் வைத்து துணியில் தைக்கப்பட்ட ஒரு போர்ட்டு வாசலில் தொங்கிக்கொண்டிருந்தது பலவித வர்ணங்களில கிறேப் பேப்பர்கள் வாசலிலிருந்து அலங்காரப் பந்தல்வரை தொங்கவிடப்பட்டிருந்தன. கல்லூரி மாணவ மாணவிகள் அழகாக உடுத்தி மிடுக்கான நடையுடன் உலாவிக்கொண்டிருந்தனர். அன்றை விழாவில் பரிசு பெற்ற சிறுகதை எழுத்தாளன் சபேசனுக்கு

கல்லூரிச் சங்கத்தினர் பாராட்டு விழாவும் நடத்துவதாக அறிவித்திருந்தனர். சபேசனும் கல்லூரி நடைமுறைக் கேற்ப கோட் சூட்டுடன் அழகாகவே காட்சியளித்தான்.

இரவைப் பகலாக்கும் மெர்க்குரி விளக்கு ஒளியில் ஊதாக்கலரில் புடவைகட்டி அதற்கேற்ற மேற்சட்டையுடன் வனதேவதையே அன்றைய விழாவிற்கு வந்திருந்தது போன்று விளங்கும் ராஜியின் எழில் தோற்றம் இன்னும் சற்று எடுப்பாகக் காட்சி அளித்தது. அவள் இருந்த இடத்திலேயே பெரும்பாலான மாணவர்களின் கண்பார்வை குத்திட்டு நின்றன.

கல்லூரி முதல்வரே விழாவை ஆரம்பித்து வைத்து உரை நிகழ்த்தினர். ஆங்கிலம் கலந்த தமிழில் அரை குறையாகப் பேசியதற்காகச் சபையிடம் மன்னிப்புக்கேட்டுக்கொண்டே உட்கார்ந்து விட்டார். சங்கச் செயலாளர் சபேசனைப் பாராட்டிப் பேசியபின்பு பாராட்டுப் பத்திரமும், கல்லூரி அடையாள முத்திரை பொறிக்கப்பட்ட ஒரு தங்கப் பதக்கமும் சபேசனுக்குக் வழங்கப்பட்டன. நன்றி தெரிவித்துப் பேசிய சபேசன் பாரதியார் காட்டிய புதுமை பெண்ணைப்பற்றி அழகாக எடுத்துக் கூறினுன். தற்கால நாகரீக மங்கையர்கள் பாரதியின் புதுமைப் பெண்ணைக் கொலைசெய்வதுடன் பாரதியாருக்கும் அவரது கவிதைகளுக்கும் துரோகமிழைப்பதாகவும், சுட்டிக் காட்டினுன். கல்லூரித் தமிழ்ப்பேராசிரியரான சாம்பமூர்த்திஐயரே கைதட்டி அவன் பேச்சைப் பாராட்டியபோது அவன்மீது வெறுப்புற்றவர்களே ஒருகணம் வியப்படைந்தனர். ஆனல் சபேசனையே வைத்தவிழி எடுக்காது பார்த்துக்கொண்டிருந்த ராஜியைப் பலவிழிகள் நோக்குவதை அவள் உணரவில்லை.

விழா முடிந்ததும் வெளியேசெல்லத் தொடங்கினர் பலர். சபேசனுக்கு வாழ்த்து வழங்கினர் சிலர். அவர்களில் பலர் அவனுடைய கையைப்பிடித்துக் குலுக்கி ஆரவாரம் செய்தனர். பாடசாலையிலேயே அதுவும் தமிழ் பேராசிரியராலேயே தன் புகழ் உயர்ததப்பட்டதைத தொடர்ந்து தன்னைப் பாராட்டும் மாணவர் குழாமை நினைத்

துச் சிரித்தான் சபேசன். ''நான் அன்று இருந்ததுபோலவே இன்றும் இருக்கின்றேன். எனக்கு எதுவித மாற்றமும் தெரியவில்லை.'' என்று தன் மனத்திற்குள்ளே எண்ணிய படி அவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு பஸ் நிற்பாட்டும் இடம் நோக்கி நடந்தான். வாசல் கேற்றைத் தாண்டி ரோட்டுக்கு கால் வைத்தபோது தன் வரவிற்காகவே காத்து நின்றவள்போலத் தன்னை நோக்கிவரும் ராஜியைக் கவனியாமல் விலகிச் செல்ல முயன்றான்.

''மிஸ்டர் சபேசன் வண் மினிற் பிளீஸ்'' என்று மிக வும் தாழ்மையான குரலில் கூறிக்கொண்டே அவனை அணுகினாள். ''ஜெஸ், வட் யூ வோன்ற் மிஸ்'' என்று அவனும் ஆங்கிலத்திலேயே பதிலளித்தான்.

''மிஸ்டர் சபேசன், அன்று உங்கள் பேச்சைக்கேட்டு உண்மையிலேயே நான் அழுதுவிட்டேன். என்னைத் தவ ருகப் புரிந்துகொண்டு பேசிவிட்டீர்கள். நான் தங்களை என்றும் அவமதிக்கும் எண்ணத்துடன் நடந்ததில்லை. இதைக் கூறுவதற்கு ஏற்ற சந்தர்ப்பம் கிடைக்காததினு லேயே இன்று கூறுகிறேன். உங்கள் பேச்சு எவரை யும் மயக்கக்கூடியது. இன்று எங்கள் பேராசிரியரே பாராட் டும் வகையில் அழகாகப் பேசிவிட்டீர்கள். என் பாராட் டுகள் உங்களுக்கு'' என்று மூச்சு விடாமலே தன் உள் ளத்தில் உள்ளவற்றைக் கொட்டித் தீர்த்தாள். இதுவரை அவள் பேச்சை கவனமாகக் கேட்டுக்கொண்டு நின்ற சபேசன் அவள் மனம புண்படும்படியாக அன்றுதான் பேசிவிட்டதாக எண்ணி மனம் வருந்தினன். தன்னை இவ் வளவு தூரத்திற்கு மதிக்கும் ஒரு பெண்ணும் கிறீன்லன்ட் கல்லூரி மாணவிகள் விடுதியில் இருக்கின்ருள் என்பதை எண்ணியபோது அவன் மனதில் சந்தோஷம் குடிகொண் டது. ''மிஸ், அன்று தங்கள் மனம நோக நான் நடந்து கொண்டதற்காக மன்னித்துவிடுங்கள். தங்கள் பாராட் டிற்கு என் மனமார்ந்த நன்றி'' என்று கூறிவிட்டு அவள் பேச்சிற்குக் காத்திருக்காமலே பஸ் நிற்பாட்டும் இடத்திற் குச் சென்று விட்டான்.

"ஒரு பெண்ணின் உள்ளத்துணர்வுகளைப் புரிந்து கொள்ள முடியாதவனு பலரும் புகழும் எழுத்தாளன்? என்னுடன் கதைப்பதற்காகவே பலர் சந்தர்ப்பம் பார்த்துக் காத்திருக்கையில் வலிந்து தேடிக் கதைத்த என் கதையைக் கேட்காமலே ஒதுக்கிவிட்டுச் செல்லும் சபேசனுடைய உள்ளத்தில் உணர்ச்சியே இல்லையா? அவரும் மனிதன் தானே? ஏன் இப்படி அலட்சிய பாவத்துடன் நடந்து கொள்கிறார்? எவ்வளவு ஆசையுடன் காத்திருந்தேன் கதைப்பதற்கு. எழுத்தாளரான அவர் என் தோற்றத்தைக் கண்டு ஏதாவது புகழ்ந்து கூறுவார் என்றல்லவோ எண்ணினேன். "கிளியோபத்ரா" என்று சினேகிதிகள் கூட என்னைப் பாராட்டினார்களே! இவர் கண்களுக்கு இவை ஏதும் தென்படுவதில்லையா? வெறும் எழுத்தாளன் தானு? கதைகளிலெல்லாம் காதல் ரசம் சொட்டுகின்றதே! உணர்ச்சியைத் தூண்டும் வர்ணனை மிளிர்கின்றதே! அவையாவும் வெற்றுத்தாளில் மசியினுல் எழுதும் வெறும் எழுத்துக்கள் தானு? அவர் மனதில் அவற்றிற்கு இடமே யில்லையா? ஒருவேளை ரஞ்சிதம் கூறியதுபோல மற்றும் பெண்களிடம் ... ?" நினைத்துப் பார்க்கவே தலையைச் சுற்றியது ராஜிக்கு. "சீச்சி அப்படி இருக்காது அவர் நல்லவர்" என்று மனதைத் தேற்றிக் கொண்டு கல்லூரி விடுதியை நோக்கி நடந்தாள ராஜி.

அன்றிரவு சாப்பிடவே மனம் வரவில்லை அவளுக்கு. சபேசனுடைய உருவம் அவள் கண் எதிரில் களி நடனம் புரிந்தது. அலட்சிய பாவத்துடன் நடந்துகொள்ளும் அவனைப்பற்றி மற்றய மாணவிகள் கூறும் அவதூறுகள் யாவும் சுத்தப் பொய்யாக இருக்கும என அவள் தீர்க்கமான முடிவுககு வந்தாள். ஆண்கள் என்ருல் வேம்பாகக் கசந்த அவள் மனதில் சபேசன் மட்டும் கரும்பாக இனித்தான். "சபேசன்" அவன் பெயரைக் கூறும்போதே அவள் சிவந்த அதரங்கள் அவளுக்கே இனித்தன. பாடப் புத்தகத்தை விரித்தால் ஒவ்வொரு எழுத்து வடிவிலும் அவன் சிரித்த முகம். அழகான சுருண்ட கிராப்பும், சாந்தமான முகமும், குறும்பான சிறுவிழிகளும் அவள் கண்

ணுக்குள் எந்நேரமும் காட்சியளித்தன. காணுமிடமெல்லாம் அவன் தோற்றம். கனிவுடன் நெருங்கினால் ஏமாற்றம். காதல் என்றால் என்ன என்றே அறியாதவள் மனதை காதல்நோய் பற்றிக்கொண்டது.

சபேசனுடைய கதையென்றால் அவளுக்கு உயிர் அவன் கதைகளைத் தேடிப் படிப்பாள். ''சிற்றரசு'' என்ற புனைபெயரில் வெளியான கதைத் தொகுதிகள் யாவும் தேடிவாங்கிப் பத்திரப் படுத்திக் கொண்டாள். அவள் போக்கே புதுவிதமாக மாறிவிட்டது.

இதற்கிடையில் சபேசனுடைய பெயரை ராஜியின் பெயருடன் தொடர்பு படுத்தி பல இடங்களிலும் விரிவுரை வகுப்புக்களிலும் பொறித்து வஞ்சம் தீர்த்துக் கொண்டனர் சில மாணவர்கள். இவற்றையெல்லாம் பார்க்கும்போது அவள் உள்ளம் வேதனையடையும். ஆனால் அதே நேரத்தில் சபேசனை நினைக்கும்போது அவள் உள்ளம் மகிழ்ச்சியால் விம்மிப் பெருமும். ஒருநாள் விரிவுரை வகுப்பு ஆரம்பமாகுமுன்பே வகுப்பிற்கு வந்துவிட்ட சபேசனுக்கு பெரியதொரு ஆச்சரியம் காத்திருந்தது. கையில் பிடித்த புத்தகம் ஒன்றுடன் அழுதுகொண்டிருந்தாள் ராஜி. சில மாணவ மாணவிகள் சிரித்துக் கும்மாளம் போட்டுக் கொண்டிருந்தனர்.

விரிவுரை வகுப்பிற்குள் நுழைந்த சபேசனைக் கண்டதும் எல்லோரும் மௌனமாக இருந்தனர். ராஜியின் கையிலிருந்த புத்தகத்தைக் கவனித்த சபேசன் நிலைமையை உணர்ந்து கொண்டான். ''அன்புப் பரிசு'' என்ற அவனது சமூக நாவல்தான் அவள் கையிலிருந்த புத்தகம். அந்நாவலே அவள் அழுகைக்குக் காரணமாக இருக்கலாம் என்பதை அவன் ஊகித்துக் கொண்டான். ஆனால் அனுவசியமான எந்தக் கதைகளையும் வளர்த்து வம்பளப்பதை அவன் மனம் விரும்புவதில்லையாதலால் கையில் கொண்டு வந்த புத்தகத்தைப் பிரித்து அதில் தன் கவனத்தைப் பதித்துக் கொண்டான். சில மாணவிகளும், மாணவர்களும் கண்களால் ஜாடை காட்டிப் பேசியதை அவன் கவனிக்காமலும் இருக்கவில்லை.

வருடாந்த இறுதிப் பரீட்சை முடிவுற்ற பின்பு ஒருநாள் கலேப்பிரிவில் பரீட்சை எடுத்த மாணவ மாண விகள் யாபேரும் யாழ்ப்பாணக குடாநாட்டில் ஒரு உல்லா சப் பிரயாணத்தை மேற்கொண்டனர். பணக்கார வீட்டு மைனர்கள் பலர் பகட்டான ஆடைகளுடன் அன்று காட் சியளித்தனர். சாதாரணமாகக் கல்லூரிக்கு வரும் உடை யுடனேயே சபேசன் அன்றும் வந்திருந்தான். அவனே ஏளனமாகப் பார்த்துத் தங்கள் பாட்டுக்கே கேலி செய்த னர் சில மாணவர்கள். எதையும் பொருட்படுத்தாதவனுன சபேசன் அந்த மாணவர்களின் திமிரான நடத்தை குறித்து விசனப்படவில்லே. தனக்குப் பிடித்த சில நண்பர்களுடன் பலதரப்பட்ட விடயங்களேயும் பற்றி ஆராய்ச்சி நடத்திக் கொண்டிருந்தான்.

உல்லாசப் பிரயாணப் பொறுப்பு பட்டதாரிகள் சங்கத் திஞல் ஒழுங்கு செய்யப்பட்டிருந்ததால் சகல பொறுப்புக் களேயும் சங்கமே ஏற்றிருந்தது. அன்று மத்தியான போச னம் நயினுதீவு நாகபூஷணி அம்மன் கோயில் மண்டபத் தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. மாணவ மாணவிகள் உணவு உட்கொண்டிருக்கும் சமயத்தில் பசிமயக்கத்திஞல் மடத்தை நாடிவந்த ஒரு கிழவி மடத்திற்குக் கிட்ட வந்த தும் மயங்கிக் கீழே வீழ்ந்து விட்டாள். உடம்பைப் பொசுக் கும் வெய்யில் எறித்துக் கொண்டிருந்தது. எவரும் எழுந் திருக்கவில்லே. "நொன்சன்ஸ் இப்படிப்பட்ட சனியன்களே யெல்லாம் நாய் சுடுவதுபோல சுட்டுத் தள்ளவேணும்." என்ருன் ஒரு பணக்காரவீட்டு மைனர். அதைத்தொடர்ந்து கேலிச் சிரிப்புகள், ஏளனங்கள். ஆண்கள் மட்டுமல்ல பெண்கள் பகுதியிலும் அதேவிதமான ஏளனக் கதைகள். பகுத்தறிவுடைய பட்டதாரிப் பெண்களேப்பற்றி ஒருகண நேரம் சிந்தித்த சபேசனுடைய மனம் குமுறும் எரிமலே யாகக் கொந்தளித்துக் கொண்டிருந்தது. யாராவது அந்த வயோதிப மாதிற்கு உதவி செய்வார்களா என்று பொறுத் திருந்து பார்த்தான். உதவிக்குப் பதில் வசைமொழிகளும் ஏளனக்கதைகளுமே வெளிவந்தன. ராஜி உட்பட நாலேந்து மாணவிகள் அப் பெணமணிக்கு உதவ முன்வந்து எழுந்

தனர். ஆனால் நாகரீகத் திமிர்பிடித்த மாணவிகளின் பரிகாசம் அவர்களது நற்பண்பை அடக்கிவிட்டது. ''தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் ஜெகத்தினை அழித்திடுவோம்'' என்று பாரதி பாடியதை அறியாத அந் நாகரீக நங்கையர் புதுமைப் பெண்ணைப் பற்றி பாரதி பாடியதையே போற்றிப் புகழ்வதை எண்ணியபோது சிரிப்புக்கிடமானதாகவே தோன்றியது. கவிஞர்கள் பாடிய பாடல்களில் சாதகமானதைத் தங்களுக்கு உபயோகப் படுத்திக் கொள்ளும் நாகரீக மக்களின் உள்ளப்பாங்கை எண்ணி வியந்த சபேசன் தன்னை மற்றும் மாணவர்கள் கேலி செய்வார்களே என்பதையும் பொருட்படுத்தாது திடீரென எழுந்தான். அந்த வயோதிபப் பெண்மணியைத் தூக்கி நிழலில் படுக்கவைத்து முகத்தில் குளிர்ந்த நீரைத் தெளித்தான். கண்விழித்த அம்மாது கையிரண்டையும் தூக்கி அவனுக்கு வாழ்தது வழங்கினாள். ராஜி உட்பட முன்பு உதவிக்கு எழுந்த மாணவிகளும் சபேசனுக்கு ஒத்தாசையாக ஓடிவந்தனர். ராஜி தன் கையில் கொண்டுவந்த உணவுப் பொட்டலத்தை அந்தப் பெண்மணியிடம் கொடுத்தாள். அதைப் பெற்றுக்கொண்ட அமமாது ''கண்ணு உன் மனதிற்குப் பிடித்த மணவாளனுடன் மகராசியாய் வாழ ஆண்டவன் அருள் செய்வான்.'' என்று வாழ்த்தினாள். சபேசனைத் திரும்பிப் பார்த்த ராஜியின் கண்கள் அவன் கண்களை நேருக்கு நேர் சந்தித்துக் கொண்டன. ஒரே ஒரு வினாடி அந்தப் பார்வைககுத்தான் எத்தனை சக்தி. சபேசன் திரும்பி மடத்திற்குள் சென்றபோது பலர் அவனைக் கேலி செய்தனர். ஆனால் சபேசனுடைய கருத்துச் செறிந்த பார்வை அவர்களது கேலிப் பேச்சை அடக்கிவிட்டது. பட்டதாரிகள் சங்கப் போஷகரான ஒரு விரிவுரையாளர் அப்போதுதான் ஓடிவந்து சபேசனைப் பாராட்டியதுடன் அப்பெண்ணுக்குச் சாப்பாடு ஏதாவது கொடுக்கும்படி உத்தரவிட்டார்.

''சார் அந்த அமமாளுக்கு மிஸ் ராஜநாயகம் உணவு கொடுத்திருக்கின்றாள். எங்கள் கல்லூரிக்கு எங்கும் புகழ், அங்கு படிக்கும் மாணவ மாணவிகள் தர்மவான்கள்.

பெரிய இடத்துப் பிள்ளைகள் ஓர் ஏழைப்பெண் துன்பப் படும்போது பார்த்துக்கொண்டு உதவி செய்யாதிருக்கும் நற்குணம் படைத்தவர்கள், உதவிதான் செய்ய வேண்டாம் செய்பவர்களைக்கூடச் செய்யவிடாது தடுத்துக் கேலிபண்ணும் நல்லொழுக்கம் படைத்தவர்கள் என்று. பசியினால் வாடும் சிட்டுக்குருவிகளுக்கு தங்கள் உணவைக் கொடுத்துவிட்டுப் பட்டினி கிடந்த அமரகவியின் பாடல்களை இந்தப் பெண்கள் ''பட்டங்கள் பெறவும் சட்டங்கள் ஆக்கவும் பாரினில் பெண்கள் பிறந்து வந்தோம்.'' என்று முழங்குவது வேதனை தருகின்றது சார்'' என்று உணர்ச்சி வசப்பட்டுப் பேசிய சபேசனை எரித்து விடுவதுபோல நோக்கினாள் ரஞ்சிதம். அவனுடைய உருக்கமான பேச்சைக் கேட்டு சிரித்துக்கொண்டு நின்றாள் ராஜி.

''என்ன செய்வது சபேசன். எல்லோரும் நன்றாகப் பேசக் கற்றுக் கொண்டிருக்கிறார்களேயன்றி சொல்வதை செயலாக்கும் திறன் உன்னைப்போல் சிலரிடம் தான் அமைந்திருக்கிறது. இதுதான் உலகம். நீ ஒரு எழுத்தாளன். சமூகத்தின் பலதரப்பட்ட மக்களின் தன்மைகளையும் அறிந்து வைத்திருக்கின்றாய். அதனால் உனக்கு ஏழைகள் மீது கூடுதலாக அன்பு உண்டு. பணத்திமிர் உடையவர்கள் ஏழைகளின் கஷ்டத்தையும், அவர்களது துன்பத்தையுமே தங்கள் இன்பப்பாதையின் படிகளாகக் கருதுகின்றார்கள். இல்லையாயின் இன்று ஏழைகள் இப்படி வாழத் தேவையில்லை. எல்லோருககும் மனித இதயம் இருப்பதில்லை. அதனால்தான் அவர்கள் மிருகத்திலும் கேவலமாக நடந்து கொள்கின்றனர். பெண்களும் அப்படித்தான். அவர்கள் நாகரீக மோகமுடையவர்கள். தங்களைப் பெருமைப்படுத்துவதில் கவனமுடையவர்கள். ஏழைகளுடன் பழகுவதை ஏளனமாகக் கருதுகின்றவர்கள். அப்படிப்பட்டவர்கள் எப்படியப்பா உதவி செய்வார்கள்?'' என்று ஒரு நீண்ட பிரசங்கமே செய்து முடித்தார் விரிவுரையாளர் ராஜசுந்தரம்.

கேலிசெய்த மாணவ மாணவிகள் முகத்தில் கோபம் பொங்கி வழிந்தது. முகத்தைச் சுழித்துக்கொண்டே நிழலுக்காக மரங்கள் நிற்கும் இடம் நோக்கிச் சென்றனர்.

தனியே நின்ற சபேசனை நோக்கி வந்தனர் ராஜியும், மிஸ் மாக்கிரட் அலோசியசும். "மிஸ்டர் சபேசன், சேட்டில் மண்ணிருக்குத் தட்டிவிடுங்கள்" என்றாள் மாக்கிரட்.

"ஓ, ஜேஸ். அந்த அம்மாளைத் தூக்கியபோது ஒட்டிக் கொண்டு விட்டதாக்கும் பரவாயில்லை." என்று அவன் கூறி முடிக்கும்போது ஒரு மலர்க்கரம் சேட்மண்ணைத் தட்டுவதை உணர்ந்து திரும்பினான் சபேசன். "அதெல்லாம் போய்விட்டது" என்று கூறிவிட்டுச் சிரித்தாள் ராஜி.

"மிஸ்டர் சபேசன் புத்தவிகாரைக்குப் போய்வருவோமா? மிஸ் ராஜநாயகத்திற்கு அங்கு போக ஆசையாக இருக்காம் ஒரு நாளும் பார்க்கவில்லையாம், பார்க்கணும் என்று நிற்கிறாள். மற்றவர்கள் முன்பே பார்த்துவிட்டனராம். மரத்துக்குக் கீழே கூடி வம்பளக்கப் போய்விட்டனர் நீங்கள் எங்களுடன் வரமுடியும்தானே?" என்றாள் மாக்கிரட்.

"மன்னிக்க வேண்டும்! சாதாரணமாகவே மிஸ் ராஜநாயகம் என்னுடைய கதைகளைப் படிக்கும்போது பரிகசிக்கும் ரஞ்சிதம் போன்றோர் என்னுடன் நீங்கள் வருவதைச் சகித்துக் கொள்வார்களா என்ன? பாவம் பின்பு ராஜி அழவேண்டி ஏற்பட்டாலும் ஏற்படும். நீங்கள் பயப்படாமலே போய்வாருங்களேன்" என்றான் சபேசன்.

"மிஸ்டர் சபேசன்! நீங்கள் எங்களுடன் வரமாட்டேன் என்பதற்குப் பதிலாகச் சாக்குச் சொல்லித் தப்பப் பார்க்கின்றீர்கள்." என்றாள் மாக்கிரட்.

ராஜியைத் திரும்பிப் பார்த்தான் சபேசன். அவள் அழகான விழிகள் "வரமாட்டீர்களா?" என்று கேட்பது போன்று ஜாடை செய்தன.

"ஆல்ரைட் மற்றவர்களுக்குப் பயந்து நான் எதையும் இதுவரை செய்யாது விட்டது கிடையாது. நல்ல காரியத்திற்கு உதவுவதில் பிறர் இகழ்ச்சியை நாம் புகழ்ச்சியாக ஏற்கவேண்டும். மிஸ் ராஜி அவர்களுக்கு ஆட்சேபனை இல்லையாயின் நான் வரச்சம்மதம்" என்றான்.

''எனக்குத் தங்கள் கொள்கைகள் எல்லாமே பிடித்துக்கொண்டன. பொருமைக் காரர்கள் கேலி செய்வதனுல் எம் நட்பை நாம் விட்டுவிடலாகாது. அவர்களது பொருமை வலுவடையவே நானும் உங்கள் நட்பை பலப்படுத்திக் கொள்கிறேன். தயங்காமல் வாருங்கள் சபேசன்'' என்ருள் ராஜி.

''ஆல்ரைட். ஐ ஆம் ரெடி'' என்று கூறிக்கொண்டு புறப்பட்டவனைத் தொடர்ந்து இரு புள்ளிமான்கள் துள்ளிக் குதித்தோடின.

செழிப்புடன் வளர்ந்து அழகாக நிற்கும் பலவித மரங்கள் சாலையின் இரு மருங்கிலும் வரிசையாகத் தென்பட்டன. சாலையை அடுத்த பிரதேசத்தில் கண்ணைப்பறிக்கும் எழிலுடன் விளங்கும் அழகிய பூஞ்செடிகளும் இடைக்கிடையே தென்னங்கன்றுகளும் காட்சியளித்தன. அவற்றிற்கு நடுவே சாந்தசொருபியான புத்தரின் தூய்மையைப் புலப்படுத்தும் வகையில் வெண்மையாகக் காட்சியளித்தது விகாரையிலிருக்கும் தூபி. தூரத்தில் போகும்போதே அந்த இடத்தைச் சுட்டிக்காட்டினுன் சபேசன். பின்னுக்கு வந்த இருவரையும் முன்னுக்கு நடக்கும்படி விட்டுவிட்டு பின் தொடர்ந்தான் சபேசன். அடிக்கடி தன்னையே திரும்பித் திரும்பிப் பார்த்துச் சிரிக்கும் அவ்விளம் பெண்களின் கபடமற்ற உள்ளத்தை அவனுல் தவருக எடைபோட முடியவில்லை. அதுமட்டுமல்ல அடுத்து எழுதப்போகும் நாவலுக்கு அந்த நிகழ்ச்சியை ஒரு பகுதியாக வைத்துச் சிந்தனையிலாழ்ந்தபடி நடந்துகொண்டிருந்தான்.

''மிஸ்டர் சபேசன் என்ன ஒரேயடியாகச் சிந்தனையிலாழ்ந்துபோனீர்கள்?'' மாக்கிரட் சிரித்தபடியே வினவினுள் ''அப்படியொன்றும் இல்லை. இந்த விந்தையான உலகிலே எத்தனை ரக மனிதர்களை என் சிறுவயதிற்கிடையில் சந்தித்து விட்டேன் என்பதை நினைத்துக்கொண்டு வந்தேன்.'' என்று ஒரு முழுப்பொய்யை கூசாமல் சொல்லிவைத்தான்.

தீமையில்லாத விடயத்தில் பொய் சொல்லுவதில் தப்பில்லை என்று கருதுபவன் சபேசன்.

“அப்படியாயின் அந்த வரிசையில் நாங்களும் இடம் பெறுவோமா?'' என்ருள் ராஜி. கேள்வியின் முடிவில் அழகான வெண்பற்கள் வெளியே தெரியும்படி அவள் சிரிக்கும் அந்தச் சிரிப்பிற்குக் கருத்துத்தான் என்ன? சபேசன் அவளைப் பார்க்கும்போதெல்லாம் வெண்மையான முல்லை மொட்டுக்கள் அடுக்கினுல் போல் காட்சியளிக்கும் அவள் வெண்பற்கள் தெரியும்படியாக, ரோஜா இதழ்போன்ற சிவந்த அதரங்கள் விரியும். அதில் நெளிந்து மின்னலைப் போல் மறையும் அந்தச் சிரிப்பு? சந்தேகமேயில்லை இன்பச் சிரிப்பு என்பார்களே அதுதான். அந்தச் சிரிப்பு அவன் உள்ளத்தைக் கவர்ந்து தன்பால் இழுக்கும் காந்தக் கல்லைப் போன்றிருந்தது கணநேரச் சிந்தனைக்குப் பின்பு ''நீங்கள் இருவருமா? இல்லையில்லை எங்கள் கல்லூரியைச் சேர்ந்த அனைவரையுமே குறிப்பிட்டேன். நீங்கள் இருவரும் எப் படிப்பட்டவர்கள் என்பதை நீங்களே கூறுங்கள் கேட்கி றேன்'' என்ருன் சபேசன்.

''இவள் எலிசபேத்தின் தங்கை மாக்கிரட் இளவரசி'' என்ருள் மிஸ் ராஜநாயகம் வேடிக்கையுடன்.

''ராஜி அப்புறம் உன்னைப்பற்றி நான் செல்லத்தொடங் கினுல்........'' என்ருள் மாக்கிரட்.

''சொல்லுங்கள் நானும் கொஞ்சம் அறிந்து வைத்தி ருப்பது நல்லம்'' என்ருன் சபேசன்.

மாக்கிரட்டின் வாயை அடக்க ராஜி முயற்சி செய்தாள்' குறும்புக்காரியான மாக்கிரட் ''சபேசன் பாருங்களேன் ராஜியை. தன்னைப்பற்றிச் சொன்னுலும் என்று என் வாயைப் பொத்துகிருள். தான் அமராவதியாம். யாரோ அம்பிகாபதியை நினைத்து ஏங்குகின்ருள், அவனே ஒரு புகழ் உலகின் சிற்றரசன். இவள் தன் உள்ளத்தை அவன் புரிந்துகொள்ளாது திரிகின்ருனும்......'' என்றவளை ''மாக் கிரட்'' என்ற ராஜியின் அதட்டல் தடைசெய்தது.

'அப்படியா? அதுபெரிய சீறியஸ் கேஸாச்சே' என்றுவே டிக்கையாகக்கூறிச் சிரித்தான் சபேசன். இப்படி தமாஷாகப் பேசிக்கொண்டே விகாரையினுள் அடியெடுத்துவைத்தனர். அங்கே குடிகொண்டிருக்கும் சாந்தம் அவர்களேயும் அமை தியடையச் செய்தது. புத்த பிரானின் திருவுருவச்சிலையை வெறிக்கப் பார்த்துக்கொண்டு நின்றான் சபேசன். ''என்ன மிஸ்டர் ஒரே மௌனமாகிவிட்டீர்கள்'' என்றாள் குறும்புக் காரியான மாக்கிரட்.

"பார்ததீர்களா சித்தார்த்தனின் அமைதியான தோற் றத்தை. அறிவுருவின் தீபமாய்த் திகழும் இப்பெருமா னின் பொன்மொழிகளேப் பின்பற்றினால் சாதாரண மனி தன் கூடப் புத்தராகிவிடலாம். பிறப்புக்குக் காரணம் ஆசை. ஆசையை நீக்கிவிட்டால் பிறப்பு இல்லை என்ற பெரிய உண்மையைக் கூறித் தன் இளம் மனைவியையும் மகனையும் விட்டுச்சென்ற இவரும் ஒரு அரசகுல மரபினர் தானே. நாம் ஏன் இப்படியாகக் கூடாது?" என்று கூறிக் கொண்டிருந்த சபேசனை உற்றுப் பார்த்துக்கொண்டு நின்ற ராஜியின் விழிகளில் நீர் துளிர்த்து விட்டது.

"அப்படியாயின் உங்கள் மனதில் ஆசைக்கே இட மில்லையா? என்றாள் ராஜி.

இல்லை என்பதற்குப் பதிலாகத் தலையசைத்தான் சபேசன். ''அப்படியானால் இந்தப் பட்டப்படிப்பு, புகழ் தேடும் முயற்சியாவும்?''

''என் கடமைகளில் ஒன்றாகக் கருதுகிறேன். நான் செய்யவேண்டிய கடமை எனக்கு இருக்கும் ஒரே தெய்வ மான என் தாயின் துன்பந்தோய்ந்த மனதைச் சந்தோஷ மாகப் பார்க்கவேண்டும் என்ற எண்ணம். அதற்காகவே இவையாவும், அம்மாவின் கடமை முடிந்துவிட்டால் இவ் வுலகில் எனக்கென்று பற்று எதுவுமேயில்லை. இந்த அநி யாய வாழ்வையே உதறித் தள்ளிவிட்டு எங்காவது கிளம் பிவிடுவேன்'' என்று சபேசன் கூறி முடிக்கும் தறுவாயில் ''சபேசன்'' என்றவாறே தலையைத் தாங்கிப் பிடித்தவாறு மயங்கி விழப்போன ராஜியைத் தன் மார்புடன் அணைத் துக்கொண்டான் சபேசன். ''மாக்கிரட் மாக்கிரட்'' என்று

அவன் அழைத்தபோது வெளியே சென்றிருந்த மாக்கிரட் ''என்ன மிஸ்டர்'' என்றவாறே ஓடிவந்தாள். ''கொஞ்சம் தண்ணீர்'' என்றவன் அவளைச் சாய்த்து மடிமீது கிடத்தினான். வாடித் துவண்ட மலர்க்கொடி போன்று அந்த அழகு நங்கை அவன் மடியில் தலைவைத்துப் படுத்திருந்தாள். ஒரு நொடிப்பொழுதில் அவன் மனம் மின்சாரம் தாக்கியது போன்று பலவித உணர்ச்சிகளால் பீடிக்கப்பட்டு திண்டாடியது.

குளிர் நீர் முகத்தில் பட்டதும் அழகிய நீலோற்பன மலர்கள் விரிவதுபோன்று அவள் நயனங்கள் மெல்லத் திறந்துகொண்டன. மடிமீது தன் தலையைத் தாங்கிக் கொண்டிருக்கும் சபேசனைக் கண்டபோது அவள் உள்ளம் மகிழ்ச்சியால் பொங்கி விம்மியது. உடல் யாவும் உஷ்ணம் பரவி இன்பவேதனையளித்தது.

''என்னடி ராஜி இருந்தாப்போல உடம்பிற்கு'' என்றாள் மாக்கிரட்.

''ஒன்றுமில்லை'' என்று கூறிக்கொண்டே எழுந்திருக்க முயன்றவளுக்கு உதவிசெய்தான் சபேசன்.

''பயந்துவிட்டீர்களா சபேசன்? உங்கள் பேச்சைக் கேட்டுத்தான் மயங்கி விட்டேன்'' என்றாள் புன்சிரிப்பொன்றை இழையோட விட்டவாறு.

''என்ன?'' என்றான் வியப்பு மேலீட்டால்.

இதற்கிடையில் விகாரையின் வாசலில் குமிழி மிதியடியின் ஓசை கேட்டது. பின்பு ஓசை அடங்கிவிட்டது. ஒரு நிமிடத்துக்குள் அந்த விகாரையின் புத்தபிக்கு உள்ளே வந்தார்.

அமைதியான தோற்றமும் துறவுக் கோலத்துடனும் காட்சியளித்த அந்தப் பிக்குவைக் கண்டதும் சபேசனுடையமனதில் ஒரு புத்துணர்வுஏற்பட ''சுவாமி வணக்கம்'' என்று கூறிக் கைகூப்பினான்.

''குழந்தாய் எங்கோ அறிந்தமுகமாய் இருக்கே'' என்று கூறியவர் திடீரென ஞாபகம் வந்தவராக ''பிரபல எழுத்

தாளன் சபேசன் என்பது நீதானே குழந்தாய்'' என்ருர்
''ஆம் சுவாமி நான்தான்''

''புகைப்படத்தில் உன்னைப் பார்த்தபோதே உன், களை சொட்டும் வதனம் என்னைக் கவர்ந்திருந்தது. இன்று நேரடியாகப் பார்த்தபோது என் ஊகம் நிச்சயமாகிவிட்டது. குழந்தாய் புகழும் கீர்த்தியும் பெற்றுவிட்ட உன் வாழ்வின் பின்பகுதி சிறப்புடன் விளங்கினுலும் அமைதியற்றதாகவே திகழப்போகின்றது. நீ வாழப்பிறந்தவன் இல்லை. சேவைக்காகப் பிறந்தவன்'' என்று கூறியவாறே புத்தபிரானின் விக்கிரகத்தண்டை சென்று கீழே இருந்த ஒரு புல்லுப்பாயில் அமர்ந்தார்.

வண்ணமலர்களின் நறுமணம் சாம்பராணிப் புகை மணத்துடன் கூடி ஒரு இனிய மணத்தைப் பரப்பிக் கொண்டிருந்தது.

சுவாமி என்மனதிலே உள்ள சிறு சந்தேகத்தை நிவிர்த்தி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டே அவர் முகத்தைப் பார்த்துக்கொண்டிருந்தான் சபேசன்.

அவன் உள்ளக்கருத்தைப் புரிந்து கொண்டவர்போல புன்முறுவல் பூத்த முகத்துடன் உட்கார்ந்து பேசுங்களேன் என்று கேட்டுக்கொண்டார். சபேசன் உட்கார்ந்ததும் நாணிக் கோணிக்கொண்டே அவன் பக்கத்தில் அமர்ந்தாள் ராஜி. மாக்கிரட் வெளியில் வேடிக்கை பார்க்கச் சென்று விட்டாள்.

''சுவாமி வாழ்க்கையின் ஆசாபாசங்களைத் துறந்து ஒருமைப்பட்ட மனத்துடன் இருந்துவிட்டாலும் என் பிற்கால வாழ்வு அமைதிபெருதா? அமைதியற்ற வாழ்வு சஞ்சலமுள்ளதாகவே இருந்துவிட்டால் நான் வாழ்ந்து என்ன பலன் காணப்போகின்றேன்? அமைதியே உருவான சித்தார்த்தன் காட்டிய வழியிலுமா அமைதி கிடையாது?'' சிறு பிள்ளையாலுைம் கருத்தாளம் நிறைந்த அவன் பேச்சு அவர் உள்ளத்தைத் தொட்டுவிட்டது. அவன் சிறுவிழிகள் அவர் உள்ளத்தை ஊடுருவி பாசம் என்ற தீயை உண்டாக்க எத்தனிப்பன போன்று இருந்தன. அமைதியே உருவான புன்முறுவலுடன் ''குழந்தாய்

பயப்படாதே ஆண்டவன் திருவிளையாட்டிலிருந்து எவருமே தப்பமுடியாது. உன் அறிவுப்பாதை ஞானமார்க்கம் நோக்கிச் செல்வதால் என்னதான் ஏற்பட்டபோதும் தளராத மன உறுதியுடன் சமாளித்துக் கொள்வாய். யார் இந்தப் பிள்ளை உன்கூட வந்தவளா?''

''இவர்களுக்குத் துணையாகவே நானும் இவ்விடம் வர நேர்ந்தது. அவர்களுடைய வேண்டுகோளால் தங்களைத் தரிசிக்கும் பாக்கியம் பெற்றேன்'' என்று மகிழ்வுடன் கூறினான். வெளியே சென்ற மாக்கிரட்டும் வந்துசேரவே பௌத்த சந்நியாசியிடம் விடைபெற்றுக்கொண்டு விகாரையை விட்டுப் புறப்பட்டனர். கடலிலே மிதக்கும் தெப்பம்போல அவன் உள்ளக்கடலில் பலவித சிந்தனைகள் மிதந்துகொண்டிருந்தன.

பல்கலைக் கழகத்திலிருந்து வந்த பட்டமளிப்பு விழா அழைப்பு இதழைப் படித்து முடித்தபோது ராஜிக்குப் பழைய நினைவுகள் கியூ வரிசையில் மனதில் தோன்றின. நேற்றுத்தான் பரீட்சை முடிந்தது போலிருக்கிறது. நாட்கள்தான் எவ்வளவு வேகமாக ஓடி இருக்கின்றன. பரீட்சை மண்டபத்தின் ஆழ்ந்த அமைதிக்கு இடையே படபடவென்று அடித்துக்கொள்ளும் மனநிலையோடு விடைகளையும், எதிர்காலத்தையும் சேர்த்துத் தவித்த நாட்கள் இப்போதுதான் கழிந்து போயின போல் தோன்றுகின்றன. குறுக்கும் நெடுக்கும் நடைபோட்டுக் கொண்டே மாணவர்களைக் கண்காணித்த பேராசிரியர்கள், விரிவுரையாளர்களின் கூரிய விழிப்பார்வையும், விடை எழுதிய தாள்கள் புரட்டப்படுகிற ஒலியும், விடைகளை உரிய நேரத்திற்குள் எழுதி முடித்துவிட வேண்டுமே என்று பரபரப்புக் காட்டும் முகங்களும் இன்னும் பசுமை மாறுமல் கண்ணுக்குள் நிறைந்திருக்கின்றன. மனதிற்குள் நினைவிருக்கின்றன. படித்துக் கொண்டிருக்கும்போது பரீட்சை பற்றிய கவலை. பரீட்சை எழுதியபோது ரிசல்ட் பற்றிய கவலை.

றிசல்ற் வந்ததும் வாழ்க்கையைப் பற்றிய கவலை. இப்போது மீதமிருப்பது இந்த மூன்ருவது கவலைதான். முடிவாக நினைவுகளும், நினைவுகள் பிறந்த மனமும் எல்லையற்ற எண்ணக் குவியல்களின் வளர்ச்சியின் இடைநடுவில் மேலே வளராமல் நின்றன. ராஜியின் மனதிலிருந்து ஒரு பெருமூச்சு வெளிப்பட்டு அவள் உள்ளத்துச் சுமையை அளவெடுத்துக் காட்டுவது போலிருந்தது.

ஆசைகள் அலைமோதும் அவள் உள்ளத்தில் எல்லை அரணுக விளங்கினுன் சபேசன். பட்டதாரியாக வரவேண்டும் என்ற நோக்குடன் கல்லூரியில் சேர்ந்த அவனுடைய எண்ணம் நிறைவேருது போனபோது ராஜிக்குத் தான் மட்டும் ஏன் சித்தியடைந்தேன், அவருடன் நானும் சித்தியடையாது போயிருக்கக் கூடாதா? என்ற நினைவே மேலோங்கி நின்றது. ஆனுல் பரீட்சை முடிவு வெளியானதும் ராஜியை வாழ்த்துவதற்கென்று ஓடிவந்த சபேசனுடைய முகத்தில் என்றும் போலக் கவலையற்ற ஒளி பிரதிபலிப்பதைக் கண்டபோது ராஜிக்கு வியப்புத் தாங்க முடியவில்லை. "நான் மட்டும் சித்தியடைந்து என்ன பலன்? நீங்கள் ஒரு குடும்பத்தை நிர்வகிக்க வேண்டிய ஆண்மகன். சிறிதுகூடக் கவலைப்படுவதாகத் தெரியவில்லையேசபேசன்" என்ருள் நாத் தழுதழுக்க.

"ஆசைகளுக்கு அளவேயில்லை மிஸ் ராஜநாயகம். நான் படிப்பைப்பற்றியோ, பட்டம் பெறுவதுபற்றியோ, பெருது விட்டதைப்பற்றியோ கவலைப்படவில்லை. இனிமேலும் அப்படியேதான். உங்கள் எண்ணம் பூர்த்தியாகி விட்டதற்காக நான் மகிழ்ச்சி அடைகின்றேன். என்னைப் பற்றிய கவலையே எனக்கு இல்லை. அதுசரி இனி உங்கள் திட்டம் என்ன?"

"என் திட்டமா? எனக்கு எங்காவது ஒரு வேலை தேடித் தரமுடியுமா?"

"வேலையா?"

"ஆமாம். ஏன் அப்படிப் பார்க்கிறீர்கள்?"

"இல்லை. நீங்கள் உழைத்துச் சம்பாதிக்கும் எண்ணத்

துடனு படித்தீர்கள்? அப்பா பெரிய புள்ளி, உங்களை வேலைபார்க்க அனுமதிப்பாரா?''

''அனுமதிக்க மாட்டார். ஆனால் கல்யாணம் என்ற பந்தத்திலிருந்து விடுபட்டு என்னை நான் காப்பாற்றிக் கொள்ள இது தவிர வேறு மார்க்கமே இல்லை சபேசன்'

''மணந்தான் பெண்களுக்குக் கிடைக்கும் ஒரே ஒரு தொழில். அதுதான் அவளுடைய சிறந்த தொழிலுமாகும்'' என்று லின்-யூ-டாங் என்ற ஒரு அறிஞன் கூறிவைத் திருக்கின்றான். நீங்கள் என்னவென்றால் வேறு தொழில் பார்த்து இதிலிருந்து தப்ப யோசிக்கின்றீர்கள்.''

''விவாகம் என்பது தனிப்பட்ட ஒருவரின் விருப்பத்தின் மேல் நடக்கும் செயலல்ல என்பதை நீங்கள் ஏற்பீர்களா?''

''ஆமாம்''

''அப்பாவின் எண்ணப்படி நடந்துகொண்டு நான் விரும்பாத ஒருவனை ஏற்க எனக்கு மனமில்லை''

''அப்படியாயின் உங்கள் எண்ணத்தை அப்பாவிடம் கூறுவதுதானே?''

''என் எண்ணம்.........'' அவள் கண்கள் கண்ணீர் உகுத்தன. கண்ணீரைக் கண்டறியாத அந்த அழகு விழிகளில் நீர் வடிவதைக் கண்டு அவன் உள்ளம் வேதனை அடைந்தது. அவள் இன்பச் சிரிப்பின் மோகனக் கிறு கிறுப்பைக் கண்டு மகிழ்ந்த அவனுக்கு அவள் அழுகை அதுவும் தன் முன்னிலையில் தனிமையில் அழுவதென்றால்?

''ராஜி இதென்ன சிறு பிள்ளைமாதிரி'' என்றான் அவளைத் தேற்றும் பொருட்டு.

''மேடும், பள்ளமும் அருகருகே நிற்கின்றன. உடலில் தான் நெருக்கமே தவிர உள்ளத்தில் நெருக்கமில்லையே. என் எண்ணம்போல நான் விரும்பியவர் எனக்குக் கிடைப்பாரா? என்ன?

''ராஜி! நீங்கள் விரும்புபவன் உங்களுக்குக் கிடைக்க மாட்டானா? அழகும், அறிவும், பண்பும், பணமும் உங்

களிடம் அடைக்கலம் இருக்கும்போது குருடன்கூட உங்களை வெறுக்கமாட்டானே ராஜி. எத்தனையோபேர் போட்டி போட்டுச் சுயம் வரம் நடத்தக் கோருவார்களே. உங்களை ஏற்க மறுக்கும் அந்த மடையன் யார்? அன்று புத்த விகாரைக்குச் செல்லும் வழியில் மாக்கிரட் சொன்னது வேடிக்கை என்றல்லவோ நினைத்தேன். உங்கள் தகுதிக் கேற்ற அந்தஸ்துடைய அவன் யார் ராஜி. "உற்ற நண்பன்தான் சிறந்த உறவினன்" என்று புத்தர் கூறி இருக்கின்றரே, என்னிடம் உயிருக்குயிரான நண்பனைப்போல பழகியும் இதுவரை இவ்விடயத்தை என்னிடம் கூருது மறைத்து விட்டீர்களே! இப்போதாவது சொல்லுங்கள். எத்தனை கஷ்டம் நேரினும் அவனிடம் காலில் விழுந்து கெஞ்சியாவது உங்களை மகிழ்விக்கிறேன். உங்கள் இன்பச் சிரிப்பை மீண்டும் இந்த அழகு முகத்தில் கண்டு ஆனந்தமடைகின்றேன். சொல்லுங்கள் ராஜி." எனத் தவியாய்த் தவித்தான் சபேசன்.

"நிட்சயமாக என் வேண்டுகோளை நிறைவேற்றுவீர்களா?"

"என்னிடம் நம்பிக்கையில்லையா?"

"சபேசன் நான் விரும்புவது உங்களைத்தான்" என்று கூறியவள் தலை நாணத்தால் தாழ்ந்துவிட்டது. இந்த வார்த்தையைக் கேட்டபோது அவன் அதிர்ச்சியடைந்தான். பலவித சிந்தனை வெடிகள் அவன் உள்ளத்தில் சிதறி வெடித்தன. மனம் செயலற்று ஒரு நிலைட்பட்ட ஏகாந்த சூனியமாகிவிட்டது. மௌனம் அவனை ஆட்கொண்டது'

"ஏன் நான் உங்கள் காதலுக்குத் தகுதியற்றவளா?" ஏக்கத்தின் தவிப்பாய் ஏமாற்றத்தின் பிரதிபலிப்பாய் அவள் குரல் ஒலித்தது.

"இல்லை ராஜி போயும் போயும் என்னையா விரும்பினீர்கள்? உங்கள் தகுதிக்கு நான் ஏற்றவனு? அதுதவிர எம்மிடையே இருக்கும் அந்தஸ்து பேதத்தை நினைத்தீர்களா? எனக்கு நீங்கள் வாழ்க்கைப்பட உங்கள் பெற்ருர் தான் சம்மதிப்பார்களா? நான் மனதாலும் நினைத்துப்

பார்க்கமுடியாத உயரத்தில் இருக்கும் நீங்களா பள்ளத்தி லிருக்கும் என்னைப் பெரிதென மதித்துக் கலங்கினீர்கள். ராஜி! உன்னை என் மனைவியாக்க நான் மனதாலும் நினைத் ததில்லை. நினைத்திருந்தாலும் எண்ணத்தளவிலேயே நினைக்க முடியாதவளாக நீயிருக்கும்போது ஒரு ஏழை எழுத்தாளனை மருமகனுக்க உன் தந்தை சம்மதிப்பாரா? நம்மிடையே அகழியாக விளங்கும மதபேதம் திருமணம் என்னும் பாலத்தின் உதவியால் கடக்கக்கூடியதா? சிந்தித்துப் பார்த்தா இந்த முடிவிற்கு வந்தாய்? ஆசையின் ஊற்றே பெண்களின் மனதிலிருந்து பிறக்கிறது. அதில் இருக்கும் நன்மை தீமைகளை அவள் எண்ணிப் பார்க்காமல் ஆசை என்னும் ஊற்றைப் பெருக்கெடுத்து ஓடவிட்டு விடுகின் ருள். அதில் ஏற்படப்போகும் பிரளயங்களை அவள் கிஞ் சித்தேனும் சிந்திப்பதில்லை. ராஜி, நான் உன் எண்ணத் திற்கு, இனிய நினைவுகளுக்கு மாருன கருத்துக்களைக் கூறுவதால் நீ என்மீது கோபப்படலாம். ஆனல் நான் கூறும் கசப்பான, உனக்கு வேண்டாத வார்த்தைகளில் தான் உன் எதிர்காலத்தின் நன்மை அடங்கியிருக்கின்ற தென்பதைச் சிந்தித்து முடிவுசெய்துகொள். உன்னை என் மனைவியாக அடைவதற்கு நான் பாக்கியம் செய்திருக்க வேண்டும். பௌத்த விகாரத்துப் பிக்கு சொன்னதை நினைவில்கொண்டு முடிவை நிட்சயம் செய்துகொள். அமைதியே காணமுடியாத என் வாழ்வில் பங்குகொண்டு உன் இன்பவாழ்வைப் பாழடித்துவிடாதே. உன் இதழ் களில் மலர்ந்து என்னை மகிழ்விக்கும் அந்த இன்பச்சிரிப்பை உன் மதிமுகத்திலிருந்து திருமணம் என்ற உறவின்மூலம் பிரித்துவிடாதே ராஜி" என்று அவள் கரங்களைப்பற்றினுன்.

"சபேசன் என் உள்ளத்தில் என்றே வளர்ந்துவிட்ட ஆசைக்கு இனி அணைபோட்டுப் பலன் காணமுடியாது. உங்கள் அலட்சிய மனப்பான்மையே என்னை உங்கள்பால் அன்புகொள்ளச் செய்தது. உங்கள் இனிய சுபாவம் என்னை உங்களோடு பாசம் என்ற இரும்புச் சங்கிலியால் இணைத்துவிட்டது. பௌத்த விகாரத்துப்பிக்கு சொன்னரே அமைதியின்மை அதை உங்கள் அருகிலிருநது போக்க

டித்து உங்கள் உள்ளத்தில் நிரந்தர அமைதியை நிலை நாட்டவேண்டும் என்று அன்றே உறுதி கொண்டேன். ஆனால் நீங்கள் திருமணம்பற்றிக் கூறும் சுசப்பான செய்திகளைக் கேட்டு என்னை, என் எண்ணத்தை வெறுத்து விடக்கூடாதே என்பதற்காக இத்தகவலை வெளியிடாது மறைத்து வைத்திருந்தேன். என்னை மன்னித்து விடுங்கள்'' என்று அவன் பாதத்தில் விழுந்து வணங்கப்போனவளைத் தடுத்து நிறுத்தி ''அதெல்லாம் இப்போது வேண்டாம், இன்னும் காலமிருக்குது. நன்கு சிந்தித்து முடிவு செய்து கொள் ராஜி. உனக்கு நான் மறுப்புக் கூறமாட்டேன். ஆனால் என் அம்மாவின் முடிவும் வேண்டும் நன்கு சிந்தித்த பின்பு உன் முடிவைக் கடிதமூலம் தெரிவித்துவிடு நான் வருகின்றேன்'' என்று கூறி விடைபெற்றுப் பிரிகின்றான்.

ஒரு வினாடிநேரம் ஒளி வெள்ளமாய் வண்ணக் கோலமிட்டு உடனே கருகிவிடும் மத்தாப்பு ஒளியாக அமைவதில்லையே வாழ்க்கை என்ற நோக்குடன் தான் ராஜியைச் சிந்தித்து முடிவுசெய் என்று கூறி விடைபெற்றுவந்தான் சபேசன். ஆனால் அவளுடைய வேண்டுகோள் அவன் உள்ளத்தில் பல இனிய உணர்வுகளுக்கு இடமளித்து விட்டதென்றே கூறவேண்டும். எழுத்தளவில் காதல் ரசங்களை, உணர்ச்சிக்குவியல்களை, இன்பவெள்ளங்களை, சிருஷ்டித்த அவன் இதயத்தில் கற்பனையில் கண்ட இன்பம் செயலளவில் மாறுவதென்றால்? எவளை ஒரு அழகின் ரூபமாக எண்ணி அவனது இனிய நினைவைக்கொண்டு கதைகள் பல ஆக்கினானோ அவளே தன் நினைவுகளுக்கு உருவம் கொடுத்து தன் உள்ளத்தோடும் உடலோடும் ஒன்றுய்ச் சேர்வதென்றால்? சபேசனுடைய உள்ளம் ஒரு போதும் காணாத மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதந்துகொண்டிருந்தது. ''ராஜி! ராஜி! கால நடையினிலே உந்தன் காதல் தெரியுதடி'' என்று தன்னுள் சொல்லிக்கொள்வான். அந்த இனிய நினைவில் ஒருவாரம் கழிந்த விதமே அவனுக்குப் புரியாத புதிராக இருந்தது. காலைத் தபாலில் வந்த கடி

தங்களைப் பிரித்தபோது அவன் உள்ளத்தை உவகையில் ஆழ்த்தும் கடிதமொன்றும் இருந்ததைக் கண்டான். கடிதத்தைப் பிரித்துப் படிக்கத்தொடங்கினான் சபேசன்.

அன்புள்ள சபேசன்,

ஒரு வாரமாக உங்களைக் காணாது இருந்தது ஒரு வருடம் போலிருக்கின்றது. என்னை மறந்துவிட்டீர்களா? என்ன? நீங்கள் என்னைப் பிரிந்திருந்தாலும் என் அண்மையில்தான் இருக்கின்றீர்கள். உங்களை நண்பன் என்பதா? என் தலைவன் என்பதா? என் வாழ்வனைத்தின் இயக்கமும் சென்று சங்கமிக்க வேண்டிய அசையாத இலட்சியம் என்பதா? ஆமாம் நீங்கள் ஒரு மகத்தான இலட்சியம்தான். என் வாழ்வின் ஒவ்வொரு மூச்சினோடும், சுக துக்கம் யாவற்றையும் பொருட்படுத்தாத நியதி வேகத்தோடும் உங்களையல்லவா நான் நெருங்கிவந்து கொண்டிருந்தேன். நான் பிறந்தேன் என்ற நிகழ்ச்சியின் தவிப்பற்ற நிறைவு உங்கள் கரங்களுள்தான் ஒருநாள் ஏற்பட வேண்டும் என்ற மாபெரும் ஆசை நிறைவேறிவிட்டபோது நான் இதுவரைநாள் என் மனதிலே கொணடிருந்த இலட்சியம் நிறைவு பெற்றுவிட்டதாகவே எண்ணுகின்றேன். சபேசன்! உங்கள் கரங்கள்! அந்த நினைவில்தான் எத்தனை தண்மை! நான் கண்ணை மூடினால் உங்கள் உள்ளத்தின் மோகனப் பனிக்கனவுகள் என் உள்ளத்தின் மூச்சில் சிறிது சிறிதாய் வண்ணமிட்டு நீங்கும். வாழ்வின் சுமைகளையெல்லாம் உங்கள் புன்னகையின் போதையில் இறக்கி வைப்பேன். நீங்கள் என்னை அணைத்து மகிழ்விக்க, பிறந்த அன்றைப்போல ஏதுமறியாச் சிறுமகவாய் உன்மார்பில் சாய்வேன். (நீ கடலாய் விரிவாய். நான் அதில் சிறு அலையாய்ப் பாய்வேன். நீ இரவாய்ப் படர்வாய், நான் அதில் இனிய மணமாய்க் கலப்பேன்.) இந்த அறுக்கவொண்ணாத எளிய உறவின் நிறைவைக்கொண்டே, நான் ஒவ்வொரு கணமும் உன்னை நோக்கி நகர்ந்து வந்திருக்கின்றேன். சபேசன்! மதம்பற்றிக் கூறினீர்கள் ஆனால். "சமயம் என்பது மனித சமூகத்தை அறநெறியில் வழிநடத்த உதவும்

ஒரு கைவிளக்குப் போன்றதுதானே தவிர அது பிளவுபடுத்தி வேற்றுமையைக் கட்டிக்காக்கும் தடைச்சுவர்போன்றதல்ல" என்றும், "அன்புவழி சென்று ஆண்டவனைக் காண்பதுதான் மதங்களில் எல்லாம் சிறந்த மதம்" என்றும் போதித்துவிட்டு என்னை மதம் என்ற ஒரு காரணங் காட்டி விலக்கப் பார்க்கின்றீர்களே. நாளை உங்களை எதிர்பார்த்திருக்கும்

அன்பின் –ராஜி.

கடிதத்தின் ஒவ்வொரு வரியிலும் வெண்முல்லைப் பல்வரிசை தெரிய அவளது அன்புமுகம் காட்சியளித்தது. அவன் எண்ணத்தில் அவள் நீக்கமற நிறைந்து விட்டாள். பாரதியார் பாடிய கண்ணம்மா என் குழந்தை என்ற பாட்டு அவன் உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து இனிய ஒலியுடன் வெளிக்கிளம்ப ராஜியின் உருவமும் குழந்தையாயிருந்து அவன் கன்னத்தில் முத்தமிட்டு விளையாடுவது போன்ற பிரமை, வாய்விட்டு அமரகவியின் பாடலைப் படிக்கலுற்றான்.

**சின்னஞ் சிறுகிளியே – கண்ணம்மா**
**செல்வக் களஞ்சியமே**
**என்னைக் கலி தீர்த்தே – உலகில்**
**ஏற்றம் புரிய வந்தாய்** (சின்ன)

..........................................

**கன்னத்தில் முத்தமிட்டால் – உள்ளந்தான்**
**கள் வெறி கொள்ளுதடி**
**உன்னைத் தழுவிடிலோ — கண்ணம்மா**
**உன்மத்த மாகுதடி.**

பாரதியின் பாடலை பண்ணோடு வாய் இசைக்க அவன் பசுமையான உள்ளம் ராஜியின் அழகுருவத்துடன் ஓடி விளையாடிக்கொண்டிருந்தது. மகன் உருக்கமாகப் பாடும் பாடலைக் கேட்டு மெய்மறந்த தாய் அவன் விரும்பிப் பருகும் காப்பியுடன் அறையுள் நுழைந்தாள். தாயின் வரவை எதிர்பாராத சபேசன் தன் பாட்டை நிறுத்தாமலே மேலே தொடர்ந்து கொண்டிருந்தான்.

"என்னப்பா ஒரேயடியாய்ச் சங்கீதத்தில் மூழ்கி விட்டாய், பரீட்சையில்தான் கோட்டைவிட்டாய் என்று புத்தி வந்ததா பிறகும் அந்தப் பாழாய்ப்போன கற்பனை உலகில் தானே உலாவிக் கொண்டிருக்கின்ருய்" என்ருள் அவனைப் பெற்றெடுத்த அன்னை.

"அம்மா பரீட்சையில் தானே கோட்டைவிட்டேன். ஆனல் பட்டதாரி ஆசிரியர்களுக்குக் கிடைக்க முடியாத சம்பளத்துடன் எனக்கு ஒரு வேலை கிடைத்துவிட்டது. என்னடா எழுதி எழுதிக் கண்ட பலன்? வெறும் புகழ் தானே என்றுகேட்டாய், மாதம் ரூபா 550 சம்பளத்துடன் பிரபல பத்திரிகையான "தினமணி" துணைபாசிரியர் பதவியும் கிடைத்துள்ளது தாயே! என்னை ஆசீர்வதியுங்கள். என்று சிறு குழந்தைபோல தாயைக் கட்டி அணைத்துக் கொண்டான். "பெற்ற பொழுதில் பிறிதுவர்க்கும தன் மகனைச் சான்ரோன் எனக் கேட்டதாய்" என்ற வள்ளுவன் கூற்றுக் கொப்ப பெற்ற பாசத்தால் அவள் உள்ளம் பூரிப்படைய மகனைக் கட்டியணைத்து உச்சிமோந்தாள் அவனைப் பெற்ற பெருமிதத்தில் அவள் உள்ளம் அடைந்த பேருவகை வேறு தாயுள்ளத்திற்குக் கிடைக்குமோ என்று கூறமுடியாது. ஆசைக்கும் ஆஸ்திக்கும் என்று பெற்று விட்ட மகன் கல்யாண மாப்பிள்ளை ஆகும் வயதைக் கடந்துவிட்டபோதும் அவளுக்குச் சிறு குழந்தைபோலவே தோன்றினன். "எல்லாம் அவன் செயலடா கண்ணு" என்று தன் குல தெய்வமான முருகனை வேண்டிக் கொண்டாள்.

கால வெள்ளம் அரை ஆண்டுக்குமேல் ஓடிக் கழிந்து விட்டது. அந்த ஆறுமாதத்திலும் சபேசன் வாழ்நாளில் காணமுடியாத புது ஆனந்தங்களைக் கண்டு களித்தான். காதல் உலகம் என்று கூறும் கனவு உலகில் அவன் ராஜியுடன் சேர்ந்தே உலவிவந்தான். துன்பத்தின் நிழல் கூட அவனை அணுகியது கிடையாது. மல்லிகையின் மணமும் சாம்பிராணியின் மணமும் கலந்து வீசும் புதிய

சுகந்த மணமாக அவனுடைய இனிய வாழ்வு சென்று கொண்டிருந்தது என்றால் அதற்குக் காரணம் ராஜியேதான். காதல் என்ற இனிய உறவால் அவன் உள்ளத்தில் துன்பம் என்ற சுமை அணுகாது பிரித்துவிட்டாள். இன்பம் தங்கள் இருவருக்கும்தான் சொந்தம் என்ற நினைவு அவர்களுக்கு ஏற்பட்டுத் துன்பம் என்ற பெருஞ்சுமை ஒன்று இருக்கின்றது என்பதையே மறந்திருந்தனர்.

பதவியும், புகழும், பணமும் மனிதனை நாடிவரும் போது அவனை அகம்பாவம் என்னும் நோய் பற்றிக் கொள்வது இயல்பு. ஆனால் சபேசன் சமூகசேவைக்கென்றே தன்னை சிறுவயது முதல் அர்ப்பணித்திருந்தமையால் சமூகம் அவனை என்றும் வரவேற்கக் காத்திருந்ததால் அவனும் ஏழமையைத் தன் தோழன் என்றே என்றும் எண்ணியிருந்தான். பட்டம் பெற்றவரும் வேலையற்றிருக்கும் போது பரீட்சையில் கோட்டைவிட்ட சபேசன் பெரும் பதவியில் இருப்பதுகூடப் படித்த சிலருக்குப் பொறாமை என்றாலும், சமூகத்தில் அவனுக்கு இருக்கும் நல்லாதரவைக் கண்டு பழைய மாணவர் சங்கமும் தமது வருடாந்த விழாவிற்கு முக்கிய விருந்தாளியாக சபேசனை அழைத்திருந்தது. அன்றய விருந்து வைபவத்தில் எதி! பாராத விதமாக ராஜியே அவனுக்கு மாலைசூட வேண்டியிருந்தது. அவள் கழுத்தில் மாலையணிந்தபோது "ராஜி என் கழுத்தில் முதல் மாலையிடும் கன்னிப்பெண் நீதான் நீ இட்ட மாலை மணமாலை ராஜி. இன்று நம்மிருவருக்கும் திருமணம் நடந்துவிட்டதாகவே நான் கருதுகின்றேன்." என்று வேடிக்கையாகக் கூறி விருந்து வைபவத்தில் தன் எதிர்கால மனைவி ராஜியை மகிழ்வித்தான். அந்தக்கதை விருந்து மண்டபத்தில் ஒலிபரப்பி இன்றியே பலராலும் பரப்பப்பட்டுவிட்டது. கல்லூரியில் தாம் கேலிசெய்த காதலர்கள் தம்பதிகளாகவே மாறப்போகும்செய்தி பலருக்கு அதிசயமாகவும்,அதேநேரத்தில் மகிழ்ச்சியாகவும் இருந்தது. அன்றைய விருநது வைபவம் பழைய மாணவர் சங்க விருந்தாக இல்லாது சபேசன் தம்பதிகளது திருமண விருந்

தாகவே அமைந்தது என்று கூறலாம். விருந்து வைபவம் முடிந்ததும் ஒரே காரில் காதல் ஜோடிகளாகச் செல்லும் சபேசன் – ராஜியைக் கண்டு பொறாமையால் துடித்த உள்ளங்களில் ரஞ்சிதத்தின் உள்ளமும் ஒன்று. நாகரீகம் வளர்ந்ததாகக் கூறும் எம்மவர் சமூகத்தில் பொறாமை வளர்வதையே நாம் பெரும்பாலும் காணமுடிகின்றது என்பதற்கு ரஞ்சிதத்தின் உள்ளம் ஒன்றே சான்றாகும்.

சமூகவாழ்வில் தனக்குரிய நன்மைகளையே எண்ணும் பண்பு மனிதரிடத்தில் மட்டுமின்றி விலங்கு முதலிய தாழ்ந்த உயிரினங்களிடத்திலும் காணப்படுகின்றது. பிறருக்குரிய நன்மைகளை விரும்பும் பண்பு மனிதரிடத்திலேயே இருக்கின்றது. மக்களில் சிலர் தன் நன்மையையே விரும்புகின்றார்கள். மற்றும் சிலர் தன் நன்மையையும் பிறர் நன்மையையும் சேர்த்தே விரும்புகின்றார்கள். இந்த வகையில் இன்றைய சமூகத்தில் பெரும்பாலும் சிலரைத் தவிர மற்றவர்கள் தன் நன்மையை விரும்பி உற்ற நண்பர்கள், உடன்பிறந்த சகோதரர்கள் ஏன்? பெற்றோருக்கும் எதிராகவே நடந்துகொள்ள முற்படுவதையே நாம் காணக்கூடியதாக இருக்கிறது. சபேசன் - ராஜி ஜோடியை நேரிலேயே கண்டபின்பு பொறாமைத் தீயால் உந்தப்பட்ட பணக்கார வீட்டுப் பெண்ணான ரஞ்சிதத்தின் உள்ளத்தில் அவர்களை எப்படியாவது பிரித்து விடவேண்டும் என்ற கொடுமையான நினைவே தலைதூக்கி நின்றது. எதையும் செய்யக்கூடிய மனத்துணிவும், கொடுமைகளுக்கே அஞ்சாத அரக்கியாகவும் விளங்கினாள். ஏதும் அறியாத அப்பாவிகள் பலருக்கு அனாமதேயக் கடிதங்கள் எழுதி அவர்கள் அவஸ்தைப்படும்போது பார்த்து எக்காளமிட்டுச் சிரித்து இன்பங்கண்டவளாச்சே ரஞ்சிதம். இல்லாத ஒன்றிற்கு உருவம்கொடுத்து உள்ளதாக நடமாடவைக்கும் அவளுக்கு இனிமையான இரு உள்ளங்களுக்கிடையே மலர்ந்த காதல் உறவைப் பிரிப்பது அவ்வளவு கஸ்டமான காரியமாகத்

தெரியவில்லை. ஆனால் ராஜி பிடிவாதகாரியாகவும் சபேசன் அவளுக்கு ஈடான இலட்சியவாதியாகவும் விளங்குவதை எண்ணிப் பார்த்தபோது அவர்கள் பிரிவில் தனக்கு ஒரு புதிய உறவு ஏற்படுத்த வேண்டுமென விரும்பியது அவள் உள்ளம். அவள் வகுத்த திட்டம் செயல்படவேண்டிய நடவடிக்கைகளில் வெகு துரிதமாகக் கவனம்செலுத்தினாள்.

கால நடையினிலே காதலின் இன்பத்தை அணு வணுவாக அனுபவித்து வந்த சபேசன் தன் அன்னையி டம் உள்ளதைக் கூறித் திருமணத்திற்கு வேண்டிய ஏற் பாடுகளைச் செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் அன்று வீட்டிற்குள் நுழைந்தான். அங்கே என்றுமில் லாதவாறு மிகவும் கலகலப்புடன் அவன் அன்னை பேசிக் கொண்டிருப்பதையும், முன்பின் அறிமுகமில்லாத ஆனால் அவர்களைப் பார்ப்பதற்கே பெரும் புள்ளிகள் எனக் கணிக் கக் கூடியதுமான சிலர் இருப்பதையும் கண்டான். சபே சனைக் கண்டதும் "இவன்தான் என்மகன். உங்களுக்கும் தெரிந்திருக்கலாம்'' என்றாள் அவன் அன்னை. "ஆமாம் தம்பியைத் தெரியாதவர்கள் யார் இருக்கப்போகிறாங்க'' என்றார் வெற்றிலைக் காவிஏறிய பற்களைக்காட்டிச் சிரித் துக்கொண்டே ஒருவர்.

"தம்பியை ஒரு வார்த்தை கேட்டால் என்ன'' என்றாள் அவர்களுடன் வந்த ஒரு வயோதிப அம்மாள்.

"என் பிள்ளை என்சொற் தட்டவேமாட்டான். நான் சொல்வதே அவனுக்குத் தேவவாக்கு. நீங்கள் ஆகவேண் டியதைக் கவனியுங்கள்" என்றாள் சபேசனின் அம்மா. வந்தவர்கள் விடைபெற்றுக்கொண்டு சென்றனர். "சபேசா என் கண்ணே! அதிஷ்டம் எம்மை நாடிவருகிறதடா கண்ணு. நாம் பட்ட கஷ்டத்திற்கொல்லாம் விடிவுகாலம் வருகிறதடா. உன்னை மகனாகப் பெற்ற நான் பாக்கிய

சாலியடா'' என்றுகூறி அவனை அணைத்துக்கொண்டு அன்பு மேலீட்டால் கண்ணீர் உகுத்தாள்.

''அம்மா! என்னம்மா எனக்கொன்றுமே புரியவில்லையே'' என்றான் குழப்பத்துடன்.

''ஒரு இலட்சத்திற்கு மேலான பொருட் செல்வத்துடன் எனக்கு, இல்லை எங்கள் வீட்டிற்கு ஒரு கிருகலஷ்சுமி வரப்போறாள்''

''அம்மா'' என்றவன் மேலே ஏதும் பேசமுடியாதவனாக திக்பிரமை அடைந்தவன்போல் அதிர்ச்சியுற்றுநின்றான்

''அம்மா இதற்காகவா அவர்களிடம் உறுதிமொழி அளித்தீர்கள்''

''ஆமாம்''

''அம்மா! உங்கள் சொல்லைத் தட்டாத மகன் இந்த ஒரு விடயத்தில்.........''

அதிர்ச்சியடைந்தவளாகப் பின்னுக்கு நகர்ந்த சரஸ்வதி அம்மாள் ''என்ன சொன்னாய்? உனக்கு விருப்பமில்லையா? ஏன்? பெண் என்ன அழகில் குறைந்தவளா? அந்தஸ்து இல்லாதவளா? படிக்காதவளா? சகல சௌபாக்கியமும் நிறைந்த ஒருத்தி உன்னையே கல்யாணம் செய்யவேண்டும் என்று ஒற்றைக்காலில் நிற்கின்றாளாம். இல்லையெனில் எங்கள் வீடுதேடி வரக்கூடியவர்களா அவர்கள்? அவர்கள் அந்தஸ்து என்ன? கௌரவமென்ன?'' பெற்றமனம் தன் மகனின் நல்வாழ்வுகுறித்து ஏங்கியது.

''அம்மா! என்னை மன்னித்துவிடுங்கள். இவையாவும் ராஜியின் கால் தூசிக்குச் சமானமானவை. நான் இன்று உங்களிடம் சொல்லவேண்டும் என்று எண்ணிக்கொண்டு வந்தேன். அதற்கிடையில் என்னைக் கேளாமல் இப்படி ஒரு முடிவுசெய்வீர்கள் என்று நான் எண்ணவேயில்லை'' என்றான் கண்ணீர் விட்டபடி.

"சபேசா! என் மகன் என் சொற் தட்டமாட்டான், உலகுக்கும், ஊராற்கும் அறிவு போதிக்கும் அவன் அன்னையின் அன்பிற்கு, அவள் சொல்லிற்கு கடமைப்பட்டவன், கட்டுப்பட்டவன் என்ற நம்பிக்கையால், உறுதியால் அப்படிக் கூறினேன். பெற்ற மகன் ஊரார் பிள்ளைகள்போல் இப்படியான நம்பிக்கைத் துரோகம் பெற்ற அன்னைக்கே நினைப்பான் என்று நான் நம்பியிருக்கவில்லை." என அழுதாள், கலங்கினாள். கண்ணீரைக் கண்டறியாத அவள் முகத்தில் கண்ணீர்வெள்ளம் அணைகடந்து ஓடியது.

"அம்மா! நான் விரும்பும் பெண் ராஜி அந்தஸ்தில், கௌரவத்தில் குறைந்தவளல்ல. ஆனால் அவள் வேற்று மதத்தவள். அவளிடம் நான் உறுதி அளித்திருக்கின்றேன்" என்றான்.

அவ்வளவுதான் சாந்த சொரூபியான சரஸ்வதி அம்மாள் கண்ணகியாக மாறிவிட்டாள். பெண் புலி போலச் சீறத்தொடங்கினாள். "யாரைக் கேட்டடா உறுதிகொடுத்தாய்? உன்னை நான் கேட்கவில்லையென்று குதித்தாயே! பெற்றவளைக் கேளாமல் நீ எப்படி உறுதியளித்தாய்? அதுவும் வேற்று மதத்தவள். சபேசா! உன் தாய் உயிருடன் இருக்கும்வரை இந்தத் திருமணம் நடைபெறாது"

"அம்மா" வீரிட்டலறினான் சபேசன்.

"பெற்றவளுக்கு கொள்ளி செருகிவிட்டே நீ அவள் கழுத்தில் தாலிகட்ட முடியும்"

"அம்மா"

"என் பிணக்கோலம் கண்டபின்பே அவள் மணக்கோலம் காணமுடியும்"

"அம்மா"

"நானா? அவளா? உனக்கு வேண்டும்?"

"அம்மா! இரண்டு கண்ணில் எது வேண்டும் என்று கேட்பது போலிருக்கே உங்கள் கேள்வி"

"என்னிரு கண்களும் நீங்கள்தான் அம்மா என்ற காலம் போய் இப்போது ஒரு கண்ணில் வந்துவிட்டாயா?

சபேசா! இருபத்தைந்து வருடமாக உன்னைக் கண்கலங்காது காப்பாற்றி வந்த அன்னையைப் பார்த்தா இப்படிக் கேட்கின்ருய்? நான் உனக்கு நல்வாழ்வு தேடித்தராமல் வேறு யாரடா செய்யப் போகிருர்கள்?''

''அம்மா! நீ என் தெய்வம். உன் சொல்லை நான் மீறுவேனு? இந்த ஒரு விடயத்தில் என் விருப்பப்படி நடக்க விடமாட்டாயா? ராஜியைக் கண்டால் இப்படி எல்லாம் பேசமாட்டீர்களம்மா. அவள் அவள்.........''

''அவள் தேவலோக மங்கையாயிருந்தாலும்சரி, குபேரன் மகளாயிருந்தாலும் சரி, வேற்று மதத்தவளை என் மருமகளாக்க நான் சம்மதியேன். உனக்கு பெற்ற தாயிலும் பெறுமதியாக அவள் தோன்றினுல் இதுவரை உன்னை இமைபோலக் காத்துவந்த உன் தாயின் உறவை இன்ருேடு மறந்துவிடு''

''அம்மா! இப்படியெல்லாம் கூறி என் உள்ளத்தை வருத்தாதீர்களம்மா''

''என் சொற்படி நடக்க இஷ்டமா? இல்லையா? அதைச் சொல்லடா?''

''நான் யாரையுமே திருமணம் செய்துகொள்ளவில்லை. காலமெல்லாம் உன்னுடனே இருக்கிறேன். போதுமா? சிறு பிள்ளைபோல கேவிக் கேவி அழுதான் சபேசன். ஊரும் உலகமும் போற்றும் ஓர் பிரபல எழுத்தாளன் பெற்ற தாயின்முன் குழந்தைபோலத் தேம்பித் தேம்பி அழுவதையும், சிறு வயது முதலே அவன் பிடிவாத குணத்தைப் பற்றியும் அறிந்திருந்த சரஸ்வதி அம்மாள் அதற்கு மேல் அவனை வற்புறுத்தினுல் பிழை என்பதை உணர்ந்து சமயலறைக்குச் சென்று சுடச்சுடக் காப்பி தயாரித்துக் கொண்டு வந்தாள். சபேசன் முன் வராந்தாவை விட்டுத் தன் அறைக்குச் சென்றிருந்ததால் மகனைத் தேடி அறைக்குச் சென்ருள் சரஸ்வதி அம்மாள். வாசற்பக்கம் போகும் போதே ஏதோ பேச்சுக்குரல் கேட்டுத் தாமதித்து நின்ருள்.

"ராஜி! என் நல்வாழ்விற்காக, என் உள்ளத்தில் அமைதியை உண்டுபண்ண வேண்டுமென்ற எண்ணத்தால் உன் இன்ப வாழ்வையே பலியிட்டு மனைவி என்ற உறவை ஏற்படுத்த முயன்றாய். சாதி, சமயக் கொடுமைகளை, கட்டுப்பாடுகளை அணைத்துப் பிடித்திருக்கும் இந்தச் சமூகத்தில் நாம் இணைந்துவாழ முடியாது ராஜி. உன்னை ஏமாற்றி விட்டேன். இந்தத் துரோகியை மன்னித்துவிடு. ஆனால் ராஜி! உனக்கு என்று தந்துவிட்ட இதயத்தில் வேறு ஒருத்திக்கு இனி என்றுமே பங்கில்லை. இது சத்தியம். நான் போற்றி வணங்கும் என் தாய்மீது ஆணையாகக் கூறுகின்றேன். உனக்கென்று இன்பமளிக்காத இந்த இதயம் எவருக்கும் இன்பச் சுரங்கமா இருக்காது. இனிய நினைவுகளுக்கே என் இதயத்தில் இனிஇடமில்லை. அன்று பௌத்த பிக்கு சொன்ன வாழ்வின் அத்தியாயம் ஆரம்பித்து விட்டதடி ராஜி. இனி யாராலும என்துயர் துடைக்க முடியாது. நான் யாருக்கு என்ன துன்பஞ் செய்தேன்? முருகா! அல்லும் பகலும் உன்னை வழிபட்டதற்கு இதுவா தண்டனை? ஆசையுடன் மனைவி அருகிலிருக்க அழகியான குறப்பெண் வள்ளிமீது மோகங்கொண்டு அண்ணன் துணையுடனே சிறை எடுத்துவந்த நீ என் மனதில் உதித்துத் துளிர்விட்ட காதலைக் கருக்கிவிட எப்படித்தான் மனம் துணிந்தாய்? கடவுளே! பெற்றதாய் தன் மகனின் மணக் கோலம் கண்டு இன்புறுவாள், சாந்தமே உருவான ராஜியின் அழகும், பண்பும் கண்டு வியப்படைவாள் என்றெல்லாம் எண்ணியிருந்தேனே! எல்லாம் போச்சு. இனிமையான நினைவிற்கே இனி என் இதயத்தில் இடம் வேண்டாம்" என்று பித்தனைப் போலத் தன் பாட்டிற்குக் கூறிக்கொண்டிருந்த சபேசன் வாசலில் சப்தம் கேட்டுத் திரும்பினான் "அம்மா அம்மா" என்று கத்திக்கொண்டே ஓடிப்போய் மயங்கி விழுந்துவிட்ட சரஸ்வதி அம்மாளைத் தூக்கிக் கட்டிலில் வளர்த்தினான். மயக்கம் தீர்ந்தெழுந்த சரஸ்வதி அம்மாள் மகனை அன்புடன் தடவி விட்டவாறே "என்னுடன் கோபமா சபேசா?" என்றாள்.

"இல்லை அம்மா இல்லை, உன் மகன் உனக்கு ஒரு போதும் துரோகஞ் செய்யமாட்டான். தாய் பிள்ளையை அடிப்பது திருத்துவதற்காகத் தானே! அடித்த கைதானே அணைக்கும்'' என்று அவள் கையை எடுத்துத் தன் முகத்துடன் ஒற்றிக்கொண்டான்.

"முருகா! என் மகனுக்கு நல்ல புத்தியையும் நல்வாழ்வையும் அளித்துக காப்பாற்றுவாய் அப்பனே!'' என்று கரங்கூப்பி வணங்கலுற்ருள்.

"உடல் விலையுள்ள ஒரு பொருளல்ல, காதல்தான் விலையுள்ளது. அது நாலு பேருக்குப் பகுத்துக் கொடுக்கும் பொருளல்ல'' என்று ரவீந்திரர் கூறிய பொன்மொழியை அடிக்கடி கூறிக்கொள்ளும் அவர் எப்படித்தான் இத் திருமணத்திற்குச் சம்மதமளிப்பார்? அவர் வாழ்க்கையில் நிலவிய அமைதிக்கும் பங்கமேற்பட்டு வேதனையால் துடிக்கப் போகின்ருரே! எனப் பலவித சிந்தனையிலீடுபட்டிருந்த ராஜியின் கையில் ரஞ்சிதம் எழுதிய கடிதமொன்று படபடத்துக் கொண்டிருந்தது. தன் காதலனைத் தட்டிப்பறிக்கும் தன்மானம் அற்ற ஒருத்தியைத் தோழியாகப் பெற்றிருந்ததை எண்ணி அவளுள்ளம் வேதனைத் தீயால் வெந்து கொண்டிருந்தது.

ஆபீசிற்கு லீவு எழுதிவிட்டு ராஜியைக் காணவந்த சபேசனை என்றும்போல இன் முகத்துடனேயே வரவேற்ருள்.

''மிஸ் ராஜி! என்னை மன்னிப்பீர்களா?'' என்ருன் சபேசன்.

''உங்கள் நிலையை ஓரளவு என்ருல் ஊகிக்க முடிகிறது. உங்களை என்னுடையவராக்க நான் முயன்றேன் காலம் என் தோழிக்குத் தட்டிக் கொடுத்துவிட்டது. ரஞ்சிதம் பாக்கியசாலி'' என்ருள் மெதுவான குரலில்.

''ராஜி! நான் யாரையுமே மணக்கப் போவதில்லை உன்னைத்தவிர. இந்த உலகில் எனக்குத் துணையாக உன் அன்பு ஒன்றுதான் என்றும் இருக்கும்: என் தங்கை

கோமதிகூட இன்று வீடுவந்திருந்தாள். அம்மாவிடம் பலவாறு வாதாடினுள், பலனில்லை அழுதுகொண்டே திரும்பினுள். எனக்காக அழும் உள்ளங்கள் என் நல்வாழ்வில் அக்கறைகொள்வது போலவே அம்மாவும் என் நல்வாழ்வு கருதியே தன் பிடிவாதத்தை மாற்ற மறுக்கிருள். ஆனுல் ரஞ்சிதத்திற்கு நான் அறிவித்து விட்டேன்.''

''என்ன? என்ன எழுதினீர்கள்?'' என்ருள் பதற்றத்துடன்.

''என்னை மணந்துகொள்ள ஆசைப்பட்டது தவறு. ஏற்கனவே ராஜிக்கு உரிமையாகிவிட்ட என் உள்ளம் எவரையுமே ஏற்காது என்று.''

''பெரிய தவறு செய்து விட்டீர்கள் சபேசன்.''

''என்ன சொல்கிருய் ராஜி. நீ பேசுவது எதுவும் எனக்குப் புரியவில்லையே.''

''உங்கள் அம்மா விருப்பப்படியே நடந்துகொண்டு அந்தத் திருமணத்தை ஏற்றுக்கொள்ளுங்கள்''

''ராஜி......!''

''என்னை நீங்கள் விரும்பியது போலவே, அம்மாவையும் நேசிப்பதாஞல் அம்மாவின் மனம் கோணுமல் நடந்து கொள்ளுங்கள். எனக்கு என் வாழ்வின்மீது என்றுமே பற்றிருந்ததில்லை. உங்கள் நலமே என் நலன். நீங்கள் வாழ்ந்தால் நானும் வாழ்வேன். சபேசன் என் வேண்டுகோளை நிறைவேற்றுவீர்களா?''

''பயித்தியம் பிடித்து விட்டதா உனக்கு? என்னவோ எல்லாம் பிதற்றுகிருயே ராஜி''

''உண்மையாகத்தான் சொல்கின்றேன். எங்கள் திருமணத்தை என் பெற்ருேரும் விரும்பவில்லை. ஆகவே உங்கள் அம்மா மனம் போலவே ரஞ்சிதத்தை மணம் முடித்து சந்தோஷமாயிருங்கள்.''

''ராஜி! முழங்காலில் பலமில்லாமல் நிற்கக்கூடச் சக்தியற்று நடுங்கிக்கொண்டிருக்கும் ஒருவனைப் பார்த்து ஓட்டப் பந்தயத்தில் ஓடச் சொல்வது போன்றிருக்கின்றது உன் கூற்று'' என்ருன் சபேசன்.

"உங்கள் அன்பிற்குப் பாத்திரமான ராஜியின் மேலாணையிட்டுச் சொல்கின்றேன். அம்மாவின் சொல்லை மீறி நடக்காதீர்கள்" என்ருள் ஆவேசம் வந்தவளாக.

பேசும் சக்தியை இழந்தவனாக தளர்நடையுடன் செல்லும் சபேசனை கண் இமைக்காமல் பார்த்துக்கொண்டு நின்ற ராஜியின் கண்களை நீர்த்திவலைகள் ஆட்கொள்ள அதிலே கரைந்து அவன் உருவன் மறைந்து கொண்டிருந்தது. தன்னிடம் உள்ள ஒரு பொருளை யாரோ பறித்துக் கொண்டு கைக்கெட்டாத இடம் நோக்கிப் பறந்து கொண்டிருப்பது போன்ற உணர்ச்சி. அவளுக்கும் அவனுக்குமிடையே இருந்த உறவு அற்று பிரிவு என்ற வெளியாகி நீண்டுகொண்டு வந்தது. ''அத்தான்......... அத்தான்! உங்கள் நல்வாழ்விற்காக எல்லாத் துன்பத்தையும் தாங்க நான் என்னைத் தயார் செய்துகொண்டேன். என் உள்ளத்திலிருந்து உங்கள் உறவைப் பிரிக்க யாராலும் முடியாது அத்தான். உங்கள் வாழ்வில் சந்தோஷம் நிலவ வேண்டுமென்பதற்காகவே என் வாழ்வை நான் பலியிடுகின்றேன்.'' என்று அவள் மனம் வெதும்பிக்கொண்டிருந்தது. அவன் இனிய உருவம் அவள் உள்ளத்தில் அழியாத உயிராகக் கலந்துவிட்டது. அவனுக்காக, அவன் நல்வாழ்விற்காக தன் நன்மையையே விரும்பாத உத்தமியாக விளங்கும் அவளைப்போல வேறு எந்த ஒரு பெண்ணாலும் செய்யமுடியாது என்றே கூறவேண்டும். ஓட்டமாய் ஓடிப்போய்க் கட்டிலில் விழுந்து தன் துன்பம் தீருமட்டும் அழுது தீர்த்தாள்.

ஆட்டி வைத்தால் ஆரொருவர் ஆடாதாரே என்பதற்கியையச் சபேசன் தனக்கென ஒரு வாழ்க்கை என்பதை மறந்து தனக்கு வேண்டியவர்களான ராஜி, தன் அன்னை ஆகியோரது கட்டளைக்குட்பட்டு ரஞ்சிதத்திற்கு மணமாலை சூட்டினுன். திருமணம் முடிந்து ஒரு வாரத்திற்கு மேலாகிவிட்டது. அவனுக்கு நடந்தது, நடப்பது எதுவுமே தெரியாத அசட்டுச் சபேசனுகவே காட்சியளித்தான்.

''ரஞ்சித வாசம்'' மேல் மாடியறையில் மல்லிகை தூவிய மஞ்சம் காத்திருக்க, பருவ விருந்தளிக்க பக்குவ மான பெண் அதன்மீது பளிங்குச் சிலையென அமர்ந்திருக்க, ஆழ்ந்த சிந்தனையிலீடுபட்டவனாய் ஜன்னலினூடே வெளியுலகைப் பார்த்தவாறு நின்று கொண்டிருந்தான் சபேசன். எவ்வளவு நாளிகைதான் மௌனமாகப் பொறுத்திருக்க முடியும் ஒரு பெண்ணால். திருமணம் என்ற உறவின்மூலம் முன்பின் அறிமுகமில்லாத இரு வாலிப உள்ளங்கள் ஆற்று நீரும் கடல் நீரும் ஒன்றுசேர்ந்து சங்கமமாவது போல ஒன்று சேரும் அந்த இனிய உறவை மணமானபின் ஒரு நாளேனும் அனுபவித்திருக்காத ரஞ்சிதத்தால் மேலும் கட்டுமீறிப் பாயும் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை. என்னதான் ஆசை அலைகள் உள்ளத்தில் எழுந்து புரண்டாலும் தானாகப் மஞ்சத்துக்கு கணவனை அழைக்க எந்தப் பெண்ணுமே முயலுவாள்ளா! ஆனால் பொறுமையின் எல்லையைத் தாண்டிவிட்டால்.?

''ஏன் அத்தான், என்னுடன் பேசவும் மாட்டீர்களா?'' என்றாள் ரஞ்சிதம்.

''யேசும் சக்தியை இழக்கச் செய்துவிட்டுப் பேசும்படி கேட்க உனக்கு மனதிலே என்னதான் இருக்கோ?'' வெறுப்புடன் கடுகடுப்பும் கலந்த பதில்.

''நானும் ஒரு பெண். எனக்கும் மற்றும் பெண்களைப் போல உணர்ச்சிகள் உண்டு. தொட்டுத் தாலிகட்டிய நீங்கள்.........''

''ரஞ்சிதம்! நானா தொட்டுத் த்ாலிகட்டினேன். கட்டுவிக்கப்பட்டேன் உணர்ச்சிகள் உனக்கும்உண்டா ரஞ்சிதம்? ஒரு தோழியின் வாழ்வை நாசமாக்கி, என்னையும் விலை கொடுத்து வாங்கி நடமாடும் பொம்மையாக அறையில் அடைத்து விட்டுக் கதையளக்கிறாயா?''

''உங்கள் முடிவுதான் என்ன?''

''என் முடிவு! ஒரே முடிவு! உனக்கு அன்றைக்கே கடிதமூலம் தெரிவித்துவிட்டேன்''

''அப்படியானால் என் வாழ்வு?''

''உன் வாழ்வு? அதை யாரிடம் கேட்கிருய்?''

''என் கணவரிடம்?''

''உன் கணவன். கடையிலே பொம்மை வாங்குவது போல என் இதயத்து உணர்ச்சிகளையெல்லாம் கொன்று என் அம்மாவை பணப்பேயைக் காட்டி ஏமாற்றி ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட தொகை கொடுத்தல்லவோ விலைக்கு வாங்கி இருக்கின்ருய். ஆனுல் என் உடலைத்தான் உன்னுல் வாங்க முடிந்ததே தவிர என் உள்ளத்தை உன்னுல் பெறமுடியாது. அது என் ராஜி ஒருத்திக்கே சொந்தம்''

''ராஜி! ராஜி! ராஜி! அவளுக்கு மட்டுமா சொந்தம்? ஏகபத்தினி விரதன்போல நடிக்கிறீர்களே!''

''மூடு வாயை. வீண் பிதற்றல் எதற்கு?''

''கணவன் என்பதால் நீங்கள் நடந்து கொண்டவற்றையெல்லாம் மறந்து புதிய உறவுடன் பழகுவோமென நினைத்தேன். உண்மையைச் சொல்லித் தீரவேண்டிய கட்டத்திற்கு என்னை ஆளாக்கி விட்டீர்கள்''

''என்னடி பிதற்றுகின்ருய்''? தன்னை மறந்தவனுய் கர்ச்சித்தான் சபேசன்.

''பிதற்றலா? யாரையும் ஏமாற்றலாம் ஆனுல் இந்த ரஞ்சிதத்தை ஏமாற்ற முடியாது. சகோதரி என்ற உறவு முறையுடன் உங்களுடன் லீலை நடத்தும் கோமதி யார்? எழுத்தாளினி நளினிக்கும் உங்களுக்கும் என்ன உறவு? ஏதோ பெரிய ராஜியை மட்டும் இழந்துவிட்டதாக நடிக்கிறீர்களே! அவர்களைப்போல ஒருத்திதானே ராஜியும்!''

''ரஞ்சிதம்'' கர்ச்சித்தான் சபேசன்.

''உள்ளதைச் சொல்ல உடம்பு பதறுகிறதோ''?

''ரஞ்சிதம்! கோமதி யாரா? என் உடன் பிறககாவிட்டாலும் என் சகோதரி. அதேபோலத்தான் நளினியும். என்ன சொன்னுலும் பொறுப்பேன், ஆனுல் என் தங்கை கோமதியையும், ராஜியையும் உன்னைப்போல எண்ணிக் கதைத்தாயோ நான் மனிதனுக இருக்கமாட்டேன்'' அவன் கைக்குள் அகப்பட்ட ஜன்னல் சீலை கசங்கி நிலத்தில் வீழ்ந்தது.

"நான் சொல்வேன் கோமதி ஒரு விபச்சாரி. ராஜி மட்டும் என்ன கற்புக்கரசியா? எல்லாம் உங்கள்........." முடிக்கவில்லை அவள் கன்னத்தில் பளீரெனப் பட்டுத் திரும்பியது சபேசனின் கரம். அடியின் அதிர்ச்சியால் மயங்கிக் கட்டிலில் சாய்ந்தாள் ரஞ்சிதம்.

மயக்கம் நீங்கி எழுந்தபோது ரஞ்சிதத்தைச் சுற்றி வர அவள் தந்தை, தாய், சபேசன், டாக்டர் ஆகியோர் நின்றிருந்தனர். ரஞ்சிதத்தைப் பரிசோதனை செய்த டாக்டர் புன்சிரிப்புடன் சபேசனை அணுகி அவன் கைகளைக் குலுக்கியவாறே "கொங்கிருசுலேசன் மிஸ்டர் சபேசன்! டோன்ற் வொறி எனிதிங்" என்ருர்.

"வட் யூ சே டாக்டர்?" என்ருன் வியப்புடன்.

"விரைவில் நீங்கள் ஒரு மகனுக்குத் தந்தையாகப் போகிறீர்கள்"

"டாக்டர்! டாக்டர்! என்ன சொன்னீர்கள்" என்ருன் பதற்றத்துடன்.

"யூ வில் பிக்கம் ஏ வாதர் ஒவ் ஏ சையில்ட்" என்ருர்

சபேசனுடைய மண்டையில் பல சம்மட்டிகள் ஒன்று சேர்ந்து டணர், டணர் என்று அடிப்பது போன்ற பிரமை. உள் அறையிலிருந்த பொருட்கள் யாவும் சுற்றிச் சுழன்றது. அறையே சுழன்றது. வெளி உலகம் சுழன்றது. அதற்கு நடுவே மஞ்சள் அங்கியும் கையில் விசிறியுமாக காட்சியளித்த பௌத்த பிக்கு தோன்றினர். "குழந்தாய்! உன் பாந்த அறிவின் துணைகொண்டு எதையும் சமாளித்து விடுவாய். கலங்காதே! உள்ளத்தைத் திடப்படுத்திக் கொள்!' என்பது போன்ற குரல். கட்டில் விளிம்பை இறுகப் பற்றிக்கொண்டான்.

"நெஞ்சே நீ பதருதே! அன்ருெருநாள் இப்படித்தான் துடித்தாய். குமுறிக் கலங்கினய், நடந்தது என்ன? உன் எண்ணம் நிறைவேறியதா? கடல் அலைபோலப் பொங்கி எழுந்த நீ கரையை அடைந்து அமைதி பெறும் அலை

போல அன்னை முகம் கண்டு அமைதியடையவில்லையா? அப்படித்தான் இன்றும். பதருதே நெஞ்சே! பதருதே!'' என்று அவனுக்குள் இருந்த அந்தராத்மா பேசியது.

''அத்தான்'' ரஞ்சிதத்தின் கம்மிய குரல்.

''அத்தான்! வஞ்சகி! அந்தச் சொல்லின் பொருள் தெரியுமா உனக்கு? என்னை ஏன் ஏமாற்றினாயடி ரஞ்சிதம் நான் உனக்கு என்ன தீங்கிழைத்தேன்?''

''இவ்வளவு தொகையான சீதனம் கொடுத்து உம்மை மாப்பிள்ளையாக்கியதே இதன் காரணமாய்த்தான் தம்பி? என்றார் அவள் தகப்பன்.

''இப்படிச் சொல்ல உங்களுக்கு வெட்கமாயில்லை' நற நறவென்று பற்களைக் கடித்தான் சபேசன்.

''உன் அம்மா அல்லவா அதைப் புரிந்துகொள்ள வேண்டும்''

''அம்மா! அம்மாவிற்கு இது தெரிந்திருக்க நியாய மில்லை. தெரிந்திருந்தால் ஒருபோதும் சம்மதித்திருக்கவே மாட்டாள்''

''திருமணத்திற்கு முன்னே இதை யோசித்திருக்க வேண்டும் தம்பி. இனியென்ன செய்வது? விதி விட்ட வழி'' என்றார் அவள் தந்தை.

''விதி! விதி! வஞ்சக உலகிலே நஞ்சு மனம்கொண் டோருக்குச் சாதகமாகவும், என்போன்ற அப்பாவிகளுக்கு பாதகமாகவும்தான் விதிஎன்ற ஒன்றை இறைவன் வகுத்து வைத்தானா? கடவுளே! நீ ஒரு மனிதனாகப் பிறந்து இப் படி ஒரு கெதி உனக்கு வந்திருந்தால் அப்போதுதான் உணர்வாய் என்னிலையை. விசித்திரமான திருமணம். விந்தையான மணப்பெண. ஒரு லட்சம் பணத்துடன் திருமணம் என்ற உறவு மூலம் கருவுற்ற பெண்ணுக்கு நான் மணவாளன்?' இந்த நினைவுகள் அவன் உள்ளத் தில் அலைமோத பைத்தியகாரன்போல் ''ஹா ஹா'' எனப் பலமாகச் சிரித்தான்! சிரித்தான்! சீரழிந்த தன் வாழ்வை

எண்ணிச் சிரித்தான்! சிரித்துக்கொண்டே இருந்தான். பணக்காரப் பெண்கள் சிலரின் பண்பற்ற நடத்தை பண மென்னும் போர்வையால் கௌரவமான திருமண உறவின் மூலம் மறைக்கப்பட்டு தன்னைப்போல அப்பாவி வாலிபர் கள் பலர் கணவன் என்ற ஸ்தானத்திலிருந்து பணக்கார ராக வாழும் பரிதாப வாழ்க்கையை எண்ணிச் சிரித்தான். பயித்தியம் பிடித்தவன் போலப் பயங்கரமாகச் சிரித்தான்: அந்த அறையே அதிரும்படி பலமாகச் சிரித்துக்கொண்டே இருந்தான்.

பெற்றவர்கள் பிள்ளைகளை நல்லபடியாக வாழ வைக்க வேண்டும் என்ற ஆவலால் உந்தப்பட்டுத் தமக் குத் தெரியாமலே அவர்கள் வாழ்வை நாசப்படுத்தி விடு கின்றனர். சரஸ்வதி அம்மாளும் ஏழமையைத் தோழமை யாக்கி கொண்டிருந்த காலம் மாறி லட்சாதிபதியான மரு மகள் வருகின்ருள் என்ற ஆவலில் தன் ஒரே பிள்ளை யான சபேசனின் ஆசைகளைக் கொன்று குவித்து விட் டோமே என்ற ஏக்கத்தால் உயிரையே உடலில் நின்றும் பிரித்துக் கொண்டாள். துன்பத்திற்கு மேல் துன்பம் அவனைச் சூழ்ந்து கொண்டது.

எவன் அமைதியுடன் வாழவேண்டும் என்று தன் வாழ்வையே தியாகம் செய்தாளோ அவன் வாழ்வு நடுக்கடலில் புயலில் அகப்பட்ட படகாகி விட்டதை எண் ணிக் குமுறினுள் ராஜி.

தன்னுயிர் அண்ணனுக்கு ஏற்பட்ட அவமானத்தை யும் அமைதியற்ற வாழ்வையும் கண்டு துடித்தாள் கோமதி.

ஆனுல் சபேசன் சோகமே உருவாக உள்ளமோ அடி யிலே குமுறும் எரிமலைபோலக் குமுறத் தனிமையே துணை யாக வாழ்ந்தான். அடிக்கடி தன் அண்ணனுக்குத் தேவை யான உதவிகளைச் செய்து அவனுக்குப் பணிவிடை செய்து வந்தாள் கோமதி.

எப்படியாவது சபேசனின் உள்ளம் சாந்திபெற்று தன் மனைவியின் குற்றத்தை மன்னித்து வாழத்தொடங்கி விடுவான் என்ற எண்ணத்துடன் இவ்வுலக வாழ்வில் வைத்த உறவைப் பிரித்துக்கொண்டு கன்னியாஸ்திரி மடத்தில் சேர்ந்துகொண்டாள் ராஜி.

காலச் சக்கரம் வெகு வேகமாகச் சுழன்று கொண்டிருந்தது. பிரசவத்திற்காக வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட ரஞ்சிதம் தான் செய்த தவறுகளை எண்ணி வருந்தியபடியே பிதற்றிக் கொண்டிருந்து பிரசவத்தின் மூன்றும் நாள் தன் வாழ்வையே இவ்வுலகில் நின்றும் நிரந்தரமாகப் பிரித்துக்கொண்டு மீளாத் துயிலில் ஆழ்ந்தாள்.

அச்செய்தி கேட்ட சபேசன் அவளுக்காக இரு துளி கண்ணீர்விட்டான். அவளை மனைவி என்று தாலிகட்டிய உறவின் காரணமாக அல்ல. ஒரு பெண் என்ற இரகக உணர்வினுல்.

சபேசனை வாழவைக்க வேண்டுமென்ற ஆசையால் உந்தப்பட்டு ராஜியின் வீடுசென்ற கோமதி அதிர்ச்சியுடன் திரும்பினுள். அவள் கூறிய சொற்கேட்டு உலக பந்தத்தையே முற்றுக நீக்கிக்கொண்ட சபேசன், தன் தங்கையான கோமதியின் உறவைமட்டும் விட்டுவிடத் துணிவு வரவில்லை. அவனுக்கிருந்த ஆஸ்திகளை எல்லாம் அவளுக்கென வைத்துவிட்டு "ஆசைதான் துன்பத்திற்குக் காரணம் ஆசையில்லை என்றுல் துன்பமும் இல்லை" என்று கூறிய புத்த பெருமானின் வாக்கை மனதில் கொண்டு கால் போகும் வழியே நடந்துகொண்டிருந்தான்.

சமூகத்தில் அவன் கொண்டிருந்த உறவுகள் அவனைப் பிரிந்துகொண்டிருக்க அமைதி என்னும் உறவை நாடிச் சென்றுகொண்டிருந்தான் சபேசன்.

முற்றும்.

# எமது அடுத்த வெளியீடுகள்

**நந்திவர்மன் காதலி**
(சரித்திர நாவல்) — கே. எஸ். ஆனந்தன்

**மழலை**
(சிறுவர் கவிதைத் தொகுதி) — ச. வே. பஞ்சாட்சரம்

**பனிமலர்**
(சமூகநாவல்) — கே. எஸ். ஆனந்தன்

**இன்பச் சிரிப்பு**
(கவிதைத் தொகுதி) — ச. வே. பஞ்சாட்சரம்

**வீரத் திருமகன்**
(வரலாற்று நாவல்) — கே. எஸ். ஆனந்தன்

உலோக வேலைகள் எதுவாயினும்
சிறப்புடன் செய்வதற்கும்
சிறந்த அலுமினியப் பாத்திரங்களை
உற்பத்தி செய்வதற்கும்
நம்பிக்கையான புகழ்பெற்ற
ஸ்தாபனம்

# பட்டின உலோகவேலை
## கூட்டுறவுச் சங்கம்

48, மானிப்பாய் வீதி,
**யாழ்ப்பாணம்.**

---

*Builders, Govt. Contractors Manufacturers of*

**ALUMINIUM WARES**
**&**
**REPAIRERS**

*of all kinds of*

**IRON & BRASS WORKS**

*Importers & Exporters*

# TOWN SMITHY CO-OP. SOCIETY LTD.

No. 48, MANIPAY ROAD.
JAFFNA.

*Telegrams:* "SOOTHIRAM" *Phone:* 7108

# சிவாஸ் கோ

196, ஆஸ்பத்திரி வீதி,

**யாழ்ப்பாணம்.**




**எங்களிடம்:**

சைக்கிள்
சைக்கிள் உறுப்புக்கள்
கைக்கடிகாரம்
மணிக்கூட்டு வகைகள்

பெற்ரோமாக்ஸ் விளக்குகள்
மண்ணெண்ணை அடுப்புக்கள்
சூட்கேஸ் வகைகள்
றீகல் சைக்கிள்





மற்றும்

**சாப்புச் சாமான்களும்**

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்

**இன்றே விஜயம் செய்யுங்கள்.**


நாமகள் அச்சகம், யாழ்ப்பாணம்.